# பூர்வ எல்லைக்குறிகள்



ஆசிஷ் ராய்ச்சூர்

**இந்தப் புத்தகம் இலவசமாக மட்டுமே விநியோகிக்கப்பட வேண்டும்**

ஆல் பீப்பிள் சர்ச் & வேர்ல்டு அவுட் ரீச் ஊழியத்தால் அச்சிடப்பட்டு
விநியோகிக்கப்பட்டது, பெங்களூர், இந்தியா.
தற்போதைய பதிப்பு: 2023

**தகவல் தொடர்புக்கு**

All Peoples Church & World Outreach,
# 319, 2nd Floor, 7th Main, HRBR Layout,
2nd Block, Kalyan Nagar, Bangalore - 560 043
Karnataka, INDIA

Phone: +91-80-25452617
Email: **bookrequest@apcwo.org**
Website: **apcwo.org**

மேற்கோள் குறிப்பிடப்படாத, அனைத்து வேதாகம மேற்கோள்களும் பரிசுத்த வேதாகமத்திலிருந்து எடுக்கப்பட்டவை. 1982ல் தாமஸ் நெல்சன் Inc., என்பவரால் © காப்புரிமை பெறப்பட்டது. அனுமதியோடு பயன்படுத்தப்பட்டது. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டுள்ளது.

**நிதி பங்குதாரர்கள்**

ஆல் பீப்பிள் சர்ச்சின் உறுப்பினர்கள், பங்குதாரர்கள் மற்றும் நண்பர்களின் நிதியுதவியின் மூலம் இந்த வெளியீட்டை இலவசமாக விநியோகிப்பது சாத்தியமாகிறது. இந்த இலவச வெளியீட்டின் மூலம் நீங்கள் பலனடைந்திருந்தால், ஆல் பீப்பிள் சர்ச்சிலிருந்து இலவச வெளியீடுகளை அச்சடித்து விநியோகிக்க உதவும்படி நிதியுதவி அளிக்க உங்களை ஊக்குவிக்கிறோம். தயவுசெய்து apcwo.org/give என்ற வலைதளத்திற்குச் சென்று பார்க்கவும் அல்லது உங்கள் பங்களிப்பை எவ்வாறு வழங்குவது என்பதைப் பற்றி இந்தப் புத்தகத்தின் பின்புறத்தில் எழுதப்பட்டுள்ள "ஆல் பீப்பிள் சர்ச்சில் பங்காளராய் இருத்தல்" என்ற பக்கத்தைப் பார்க்கவும். நன்றி!

**இலவச பயன்பாடுகள் மற்றும் தொடர்புடைய இணையதளங்கள்**

**பிரசங்கங்கள்:** apcwo.org/sermons | **புத்தகங்கள்:** apcwo.org/books
**திருச்சபை செயலி:** apcwo.org/app | **வேதாகமக் கல்லூரி:** apcbiblecollege.org
**மின்வழி கற்றல்:** apcbiblecollege.org/elearn | **ஆலோசனை:** chrysalislife.org
**இசை:** apcmusic.org | **ஊழியர்கள் ஐக்கியம்:** pamfi.org
**ஆல் பீப்பிள் சர்ச் வேர்ல்டு அவுட்ரீச்:** apcworldmissions.org

(Tamil - Ancient Landmarks)

# பூர்வ எல்லைக்குறிகள்

வழிகளிலே நின்று, பூர்வ பாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து, நல்ல வழி எங்கே என்று பார்த்து, அதிலே நடவுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்;

எரேமியா 6:16

# பொருளடக்கம்

1. நம்மைச் சுற்றியுள்ள உலகம் மாறிக்கொண்டிருக்கிறது 1

2. கிறிஸ்தவத்தில் வீசுகிற மாற்றத்தின் காற்று 6

3. பூர்வ எல்லைக்குறிகள் யாவை? 9

4. நமது பூர்வ எல்லைக்குறிகள் 15

5. பணியிடத்திற்கான பூர்வ எல்லைக்குறிகள் 23

6. அர்ப்பணிப்புக்கான அழைப்பு 33

# 1
# நம்மைச் சுற்றியுள்ள உலகம் மாறிக்கொண்டிருக்கிறது

"பூர்வ எல்லைக்குறிகள்" என்ற இந்தப் புத்தகம், கொஞ்ச நாட்களாகவே என் இருதயத்தில் நான் தியானித்துக்கொண்டிருந்த ஒரு செய்தி, இப்போது இந்தப் புத்தகத்தின் வாயிலாக உங்களுடன் அதைப் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். நான் ஓட்டத்தை முடிக்கும் அதே இடத்திலிருந்து பந்தயத்தைத் தொடரும் அடுத்த தலைமுறையினருக்கு நான் கையளிக்கும் பந்தயப்பொருளாகவும், நான் பிரசங்கிக்கும் எனது கடைசி செய்திகளில் ஒன்றாகவும்கூட ஒருவேளை இந்தச் செய்தி இருக்கலாம். இந்தச் செய்தி முதலாவதாக பெங்களூர் போன்ற ஒரு காஸ்மோபாலிட்டன் நகரத்தில் உள்ள நகர்ப்புற திருச்சபையைக் குறிப்பிடுவதாய் இருக்கிறது, மேலும் இந்தியாவில் உள்ள சிறிய நகரங்கள் அல்லது கிராமங்களைச் சேர்ந்த வாசகர்களுக்கு இது உடனடியாகப் பொருந்தாது.

## நாம் வாழும் முறையில் மாற்றங்கள்

நடுத்தர வயதினராகிய நம்மையும் (25 வயதிற்கும் மேற்பட்டோர்) தற்கால மில்லினியல் தலைமுறையினரையும் (1984 முதல் 2001ஆம் ஆண்டு வரையில், இதற்கு இடைப்பட்ட வருஷத்தில் பிறந்தவர்கள்) ஒப்பிட்டுப் பார்த்தால், நாம் வளர்ந்த உலகங்களிலிருந்து வேறுபடுத்திப் பட்டியலிடக்கூடிய பல விஷயங்கள் உள்ளன.

- நம்மிடம் ஒரு கருப்பு-வெள்ளை தொலைக்காட்சியும், ஒரே ஒரு சேனலும் இருந்தது—தூர்தர்ஷன். தற்கால மில்லினியல் தலைமுறையினர் போகோ, என்பிசி, எம்டிவி, ஸ்டார் வேர்ல்ட் மற்றும் பல சேனல்களைப் பார்த்து வளர்ந்தனர். ஊடக உலகம் மாறிக்கொண்டே இருக்கிறது. மில்லினியல் தலைமுறையினர் ஊடகங்களில் மூழ்கித் திளைத்தனர்.

- நாம் கேசட் மற்றும் வானொலிப்பெட்டியைக் கண்டு வளர்ந்தோம். அவர்கள் தொலைக்காட்சிப் பெட்டிகள், எம்பி4 பிளேயர்கள் மற்றும் ஐபாட் போன்றவைகளுடன் வளர்ந்தனர். அவர்களில் பெரும்பாலோர் ஒரேயொரு வானொலியைக் கூட பார்த்ததில்லை.
- நாம் அம்பாசிடர், பிரீமியர் பத்மினி, மாருதி, டாடா, பிர்லா மற்றும் பல கார்களைப் பார்த்து வளர்ந்தோம். அவர்கள் ஹோண்டா, டோயாட்டா, பி.எம்.டபுள்யூ, மைக்ரோசாப்ட், ஐ.பி.எம், கூகுள் போன்றவற்றைப் பார்த்து வளர்ந்தனர்.
- நாம் தம்ஸ் அப், பஜல் மற்றும் ஃபன்டாவை பருகி வளர்ந்தோம். அவர்கள் கோக், டயட் கோக் மற்றும் பெப்சியை பருகி வளர்ந்தனர்.
- உள்ளூரில் உள்ள “சாப்பாடு ரெடி” என்ற சாலையோர உணவகத்தில் காஃபி குடித்தோம். அவர்கள் காஃபி டே எனும் கஃபேயில் காஃபி குடிக்கிறார்கள்.
- நமது வீட்டில் ஒரு டயல் செய்யும் தொலைபேசி இருந்தால், அது நமக்கு ஒரு மிகப்பெரிய விஷயமாக இருந்தது. சில சமயங்களில் பக்கத்து வீட்டுக்காரர்கள் ஃபோன் செய்வதற்காகவே நம் வீட்டிற்கு வருவார்கள். அவர்கள் பிடிஏ, எஸ்எம்எஸ் மற்றும் பலவற்றை உபயோகித்து வளர்கிறார்கள். அவர்களில் பெரும்பாலோர் தொலைபேசியை டயல் செய்தது கூட இல்லை, இனியும் டயல் செய்யப்போவதில்லை!
- என் கல்லூரி நாட்கள்வரை நான் கணினியில் வேலை செய்ததில்லை, என்னுடைய முதல் பவர்பாயிண்ட் விளக்கக்காட்சியை எனது 20வது வயதில் மிகவும் சிரமப்பட்டு செய்தேன். எனது மகன் ஜோசுவா, 10 வயதாக இருந்தபோதே கூகுளில் தேடி, விக்கிபீடியாவில் ஆராய்ச்சி செய்து, தனது MP4 பிளேயரில் இசையைப் பதிவிறக்கமும் செய்து, பவர்பாயிண்டில் அனிமேஷன் விளக்கக்காட்சியை செய்தான். அப்போது ஏழு வயதாய் இருந்த என் மகள் ரூத், தன் சகோதரனிடமிருந்து அவற்றைக் கற்றுக்கொள்ளத் தாமதிக்கவில்லை!
- நாம் விளையாடின காலத்தில், நமது தெருக்களில் இருந்த குழந்தைகளே நமது நண்பர்களாய் இருந்தனர். இன்றைய

> இளம் வாலிபர்கள் உடனடி செய்தியிடல், வலைப்பதிவுகள் மற்றும் முகநூல், இன்ஸ்டாகிராம், டிவிட்டர் மற்றும் பிற சமூக வலைப்பின்னல் தளங்கள் போன்ற ஆன்லைன் சமூகங்களால் இணைக்கப்பட்டிருக்கும் உலகளாவிய சமூகத்தில் வாழ்கின்றனர். அவர்களால் உலகம் முழுவதிலும் உள்ள நண்பர்களுடன் சேர்ந்து கேம் விளையாடவோ அல்லது அரட்டையடிக்கவோ முடியும்!

இப்போது நமது இளம் தலைமுறையினர்களும் குழந்தைகளும் வளர்ந்து வரும் உலகமானது—இப்போது நாம் இருக்கும் உலகம்—நாம் வளர்ந்த உலகத்திலிருந்து மிகவும் வேறுபட்டதாய் இருக்கிறது. இளம் வாலிபர்களும் குழந்தைகளும் பூர்வீகவாசிகளாய் இருக்கிறார்கள்—அவர்கள் இந்தப் புதிய உலகத்தில் வளர்ந்தார்கள் அல்லது வளர்ந்துகொண்டிருக்கிறார்கள்! இந்தப் புதிய உலகிற்குள் நாம் குடியேறியவர்களாய் இருக்கிறோம்.

## நம் நகரத்தில் ஏற்பட்ட மாற்றங்கள்

### *சம்பளம்*

முற்காலத்தில், ஐந்தரை வருட தீவிரப் படிப்புக்குப் பிறகு, இன்னும் சில வருடங்கள் செலவழித்து நிபுணத்துவம் பெற்ற பிறகுதான், ஒரு மருத்துவர் ஆரம்ப சம்பளமாக ரூ. 3,000 பெற்றுவந்தார். இப்போது, கல்லூரிப் படிப்பை பாதியில் நிறுத்திவிட்டு, கால்சென்டரில் பணிபுரிபவரால் கிட்டத்தட்ட ரூ. 15,000 சம்பாதிக்க முடியும்!

### *பல்பொருள் அங்காடிகள் வணிக வளாகங்களாக உருவெடுத்தது*

நாங்கள் வளர்ந்து வந்தபோது,பொதுவாக உள்ளூர் பல்பொருள் அங்காடி அல்லது ஷாப்பிங் வளாகத்தில் பொருட்களை வாங்கினோம், அதைப் பற்றிப் பெரிதாக சொல்லிக்கொள்ள எதுவுமில்லை. அறை குளிரூட்டி, லிஃப்ட் அல்லது எஸ்கலேட்டர்கள் போன்றவை இல்லை. இன்று, எங்கள் நகரத்தில் குளிரூட்டப்பட்ட, பல அடுக்கு மாடி ஷாப்பிங் மால்கள் இருக்கின்றன, சர்வதேச பிராண்டு பொருட்கள் எளிதில் கிடைக்கின்றன.

இவை தவிர, வாழ்க்கை முறை, வாழ்க்கையைப் பற்றிய கண்ணோட்டங்கள் மற்றும் பல விஷயங்களில் நாம் ஏராளமான மாற்றங்களைக் காண்கிறோம்.

## உலகக் கண்ணோட்டத்தில் மாற்றங்கள்: நவீனத்துவம் மற்றும் பிந்தைய நவீனத்துவம்

கடந்த 40 ஆண்டுகளில், சமீபத்திய தசாப்தத்தில், உலகளவில் கலாச்சாரம் அல்லது உலகக் கண்ணோட்டம் மெதுவாக மாறிக்கொண்டிருக்கிறது அல்லது "நவீன" சிந்தனையிலிருந்து "பிந்தைய-நவீன" சிந்தனைக்கு மாறியுள்ளது என்று சமூகவியலாளர்கள் நம்மிடம் கூறுகிறார்கள். நம்மில் பெரும்பாலோர் நவீன உலகில் வளர்ந்தவர்கள். நமது இளைஞர்களும் குழந்தைகளும் "பின்-நவீனத்துவ" உலகக் கண்ணோட்டத்தில் வளர்கின்றனர்.

### *நவீனத்துவம்*

நவீனத்துவம் அறிவொளியுடன் தொடங்கியது. அறிவியல் முறை வழக்கமாக இருந்தது. அறிவியல் மற்றும் அறிவுசார் ஒருமைப்பாட்டின் மூலம், உலகப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண முடியும் என்பது புரிந்துகொள்ளப்படத்தக்கது. உண்மை அனைவராலும் ஏற்றுக்கொள்ளத்தக்க ஒன்றாக இருந்தது. உண்மை வெளிப்படையாகத் தெரிந்தது. காரியங்கள் வெளிப்படையாக இருந்தன. நவீனத்துவத்தின் பின்னடைவு தனித்துவம் மற்றும் சுயநலமாக இருந்தது.

### *பிந்தைய நவீனத்துவம்*

சார்பியல், மற்றும் பகுத்தறிவு இல்லாத தன்மை வழக்கமாக இருந்தது. “*உண்மைகள் இல்லை, விளக்கங்கள் மட்டுமே*”—பிரெட்ரிக் நீட்சே. ஒழுக்கம் என்பது அவரவர் சார்ந்த விஷயம். நீங்கள் வாழ விரும்பும் உங்கள் சொந்த ஒழுக்க நெறிமுறைக்கான தரங்களை நீங்களே உருவாக்குகிறீர்கள். எதையும் வெளிப்படுத்த உங்களுக்கு சுதந்திரம் உண்டு, நீங்கள் சொல்வது தவறு என்று சுட்டிக்காட்ட யாருக்கும் உரிமை இல்லை. தனிப்பட்ட அனுபவமானது, ஜனங்களின் அனுபவத்தினால் கண்டறியப்பட்டவைகளின் ஆதாரம் மற்றும் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படத்தக்க உண்மையின் ஆற்றலை மீறுகிறது. உண்மை நிரூபிக்கப்பட்டு சமரசம் செய்யப்பட்டாலும் சகிப்புத்தன்மையே வழியாக இருக்கிறது. தேவன் எப்படிப்பட்டவராக இருக்க வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்களோ அவர்தான் தேவன் என்று கருதப்படுகிறது.

நமது இளம் தலைமுறையினரும் குழந்தைகளும் சவாலான உலகில் வளர்ந்து வருகின்றனர். நம்பிக்கைகள், மதிப்புகள் மற்றும் வாழ்க்கை முறைகள் போன்ற வாழ்க்கையின் மிக முக்கியமான விஷயங்களைத் தேர்வு செய்யக் கூட, அவர்களுக்கு பல விருப்பத் தேர்வுகள் வழங்கப்படுகின்றன.

2

# கிறிஸ்தவத்தில் வீசுகிற மாற்றத்தின் காற்று

## நாம் திருச்சபையை நடத்தும் விதத்தில் மாற்றங்கள்

கிறிஸ்தவத்தில் பல மாற்றங்களைக் கண்டிருக்கிறோம். உதாரணமாக, வர்ணம் பூசப்பட்ட கண்ணாடி, செங்குத்தான கட்டிடங்கள் போன்றவற்றில் ஆராதிப்பதை விட்டுவிட்டு, குளிரூட்டப்பட்ட ஆடிட்டோரியங்கள், மாநாட்டு மையங்கள் மற்றும் பல இடங்களுக்குச் சென்று நாம் திருச்சபைக் கூடுகையை நடத்துகிறோம். நாம் பாடும் பாடல்கள், கீர்த்தனைகளிலிருந்து துதிப்பாடல்களாகவும், பின் தற்கால துதி ஆராதனை பாடல்களாகவும் மாறியிருக்கிறது. பாடல் புத்தகங்களைப் பயன்படுத்துவதை விட்டுவிட்டு பாட்டுத்தாள்கள், ஓவர்ஹெட் ப்ரொஜெக்டர்கள், பின்பு பெரிய திரைகளில் காட்சியிடும்படி எல்சிடி ப்ரொஜெக்டர்கள், எல்சிடி சுவர்கள் என்று காலத்திற்கு ஏற்ப மாற்றியிருக்கிறோம். ஊழியங்களில் பயன்படுத்தப்படும் விளக்கக்காட்சிகள் இப்போது நாடகங்கள் / குறும்படங்கள் / இசை நாடகங்கள், வீடியோக்கள் மற்றும் குறும்படங்கள் என்று மாறியிருக்கின்றன.

## பிரசங்கிக்கப்படும் செய்தியில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்கள்

ஒரு பக்கம், தேவனுடைய வார்த்தையைப் பற்றிய புரிதல் அதிகரித்து வருவதை நாம் பார்க்கிறோம், அது நல்லது. மார்ட்டின் லூதர் மூலமாக 1400 ஆம் வருஷங்களில் உருவெடுத்த சீர்திருத்தம் முதல், குறிப்பாக, கடந்த 50 ஆண்டுகளில் நாம் வெகுதூரம் பயணித்து வந்துள்ளோம். தேவனுடைய வார்த்தையானது வாழ்வின் ஒவ்வொரு பகுதிக்கும் பொருந்தும் வகையில் பிரசங்கிக்கப்படுகிறது. ஆனாலும், உலகம் முழுவதும் பிரசங்க மேடைகளில் ஆபத்தான விஷயங்கள் நடக்கின்றன. போதகர்களும், பிரசங்கியார்களும், பெருந்திரளான ஜனங்களைக்

கவரவும் அவர்களைத் தக்கவைத்துக்கொள்ளவும், சமரசம் செய்யகக்கூடாத தேவனுடைய வார்த்தையை சமரசம் செய்து பிரசங்கிப்பதோடு, பிந்தைய–நவீனகால தத்துவம், நன்றாக உணர வைக்கும் செய்திகள், ஊக்கமூட்டும் உற்சாகப் பேச்சுகள் என்று தங்கள் செய்திகளை மாற்றிக்கொண்டனர், இது ஞாயிற்றுக்கிழமை காலையில் வழங்கப்படும் புத்தியீனனின்-பிதற்றலே தவிர வேறல்ல. அத்தகைய பிரசங்க பீடங்களில் உள்ள வார்த்தை ஒருபோதும் இருபுறமும் கருக்குள்ள பட்டயமாகவோ, ஒரு சம்மட்டியாகவோ அல்லது அக்கினியாகவோ இருக்காது, மாறாக, அது ஆத்துமாவுக்கு இதமான ஒரு மசாஜாகவும் இளைப்பாற ஒரு வசதியான மஞ்சமாகவும் வழியாகவும் இருக்கிறது! பாவத்தை எதிர்த்து கண்டிக்கவோ அல்லது பாவத்தை அறிக்கையிடும்படி ஜனங்களை வழிநடத்தவோ அவர்கள் மறுக்கிறார்கள். அவர்கள் பரலோகத்தின் அல்லது நரகத்தின் உண்மைத்தன்மையைப் பற்றிப் பேச விரும்புவதில்லை! மக்களின் எண்ணிக்கை குறைந்துவிடக்கூடாது என்பதற்காக, அவர்கள் இப்படிப்பட்ட செய்திகளைப் பிரசங்கிப்பதில்லை.

## செய்தியைப் பகிர்வதில் மாற்றங்கள்

நாம் இருக்கும் இந்தத் தகவல் தொழில்நுட்ப காலகட்டத்தில், மில்லினியல் தலைமுறையையும் மற்ற பொதுவான ஜனங்களையும் இரண்டு விஷயங்கள் வகைப்படுத்துகின்றன.

- இனியும் அவர்கள் கேட்டுக்கொண்டு இருக்க மட்டுமே விரும்பவில்லை; அவர்கள் தங்கள் அனைத்து புலன்களையும் ஈடுபடுத்த விரும்புகிறார்கள். அவர்கள் பிரசங்கத்தை ஏற்றுக்கொள்வதை விட மாற்றத்தை விளைவிக்கும் அனுபவத்தை விரும்புகிறார்கள்.

- இதற்கு முரண்பாடாக, அதிகரித்து வரும் தகவல் தொழில்நுட்பத்துடன், கவனம் செலுத்தும் அளவு நமக்குக் குறைவதை நாம் காண்கிறோம்!

ஏற்றவிதத்தில் அனைத்து புலன்களையும் ஈடுபட வைக்கும் வகையிலும் மற்றும் மாற்றம் உண்டாகும் ஒரு அனுபவத்தை உருவாக்கும் வகையிலும் எண்ணற்ற சத்தியங்களை வழங்கும் திருச்சபைகள் மற்றும் பிரசங்கியார்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதை நாம் காண்கிறோம். இதில் தொழில்நுட்பமும்

படைப்பாற்றலும் பெரும் பங்கு வகிக்கின்றன. இவை அனைத்தும் நல்லதுதான். ஆனால், மறுபுறம், தேவனால் நியமிக்கப்பட்ட அணுகுமுறையான, "பரிசுத்த ஆவியானவரின் வல்லமை" மற்றும் அற்புதங்கள், அடையாளங்கள் மற்றும் இயற்கைக்கு அப்பாற்பட்ட செய்கைகளான அதிசயங்கள் என்பன போன்ற பூர்வ அடையாளங்கள் சிலவற்றை நாம் இழந்துவிட்டதால், ஆக்கப்பூர்வமாக விஷயங்களைச் செய்வதிலும், காரியங்களைத் தொகுத்து வழங்குவதிலும் நமது கவனம் அதிக அளவில் திரும்பிவிட்டது. ஆயிரக்கணக்கானோர் ஆராதனையை அனுபவித்து மகிழ வரும்படிக்கு, நாம் வெறுமனே ஆத்துமாவை மகிழ்விக்கும் ஊழியத்தைச் செய்ய ஆரம்பித்து விடுகிறோம், ஆனால் அவர்களை மாற்றும், குணப்படுத்தும் மற்றும் விடுவிக்கும் பரிசுத்த ஆவியானவரின் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையை இழக்கச் செய்கிறோம். அபிஷேகம் பண்ணப்பட்ட அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், மேய்ப்பர்கள், போதகர்கள் மற்றும் சுவிசேஷகர்களுக்குப் பதிலாக, நிகழ்ச்சி நடத்தும் மேலாளர்கள், கேளிக்கையாளர், சொற்பொழிவாளர்கள், நாடகக் கலைஞர்கள் மற்றும் நடித்துக்காட்டுபவர்கள் ஆகியோரால் நமது பிரசங்கபீடம் ஆளுகை செய்யப்படுகிற அபாயம் உண்டு.

## 3

# பூர்வ எல்லைக்குறிகள் யாவை?

**நீதிமொழிகள்** 22:28
**உன் பிதாக்கள் நாட்டின பூர்வ எல்லைக்குறியை** (எல்லைக் கோடுகளை) **மாற்றாதே.**

**நீதிமொழிகள்** 23:10
**பூர்வ எல்லைக்குறியை மாற்றாதே; திக்கற்ற பிள்ளைகளுடைய நிலங்களை அபகரித்துக்கொள்ளாதே.**

ஜான் கில் என்பவரின் முழு வேதாகம விளக்கம் என்ற புத்தகத்தின் விளக்க உரையின்படி, "பூர்வ எல்லைக்குறிகள்" என்பது "பண்டைய எல்லை" அல்லது "நிலத்தின் எல்லைக்கோடு"(பெயர்ச் சொல்) என்று பொருள்படும்; நிலங்கள், தோட்டங்கள் மற்றும் சுதந்தர பாகங்களில் அதன் எல்லை குறிக்கப்பட்டன, எல்லைப்படுத்தப்பட்டன மற்றும் வேறுபடுத்தப்பட்டன; அண்டை அயலகத்தாருடனான உடன்படிக்கையின் மூலமாக முன்னோர்களால் அமைக்கப்பட்டது; அதை அகற்றுவது என்பது சட்டத்திற்கு முரணானது, மேலும் அதைச் செய்தவர்களுக்கு அது ஒரு சாபமாக வந்தடைகிறது, மேலும் ஆதி காலங்களில் அது எப்போதுமே மிகக் கொடூரமான குற்றமாகக் கருதப்பட்டது; ரோமானியர்களிடையே இது மிகவும் புனிதமான விஷயமாக கருதப்பட்டது, அந்த எல்லைகளுக்குத் தலைமை தாங்கும் ஒரு தெய்வம் அவர்களுக்கு இருந்தது, மேலும் அவைகளிடமிருந்து அது அந்தப் பெயரைப் பெற்றுக்கொண்டது.

**உபாகமம்** 19:14
**உன் தேவனாகிய கர்த்தர் உனக்குச் சுதந்தரமாகக் கொடுக்கும் தேசத்தில் உன் கைவசமாயிருக்கும் காணியாட்சியிலே முன்னோர்கள் குறித்திருக்கிற பிறனுடைய எல்லையை ஒற்றிப்போடாயாக.**

**உபாகமம்** 27:17
**பிறனுடைய எல்லைக்குறியை ஒற்றிப்போடுகிறவன் சபிக்கப்பட்டவன் என்பார்களாக; ஜனங்களெல்லாரும் ஆமென் என்று சொல்லக்கடவர்கள்.**

ஓசியா 5:10
**யூதாவின் பிரபுக்கள் எல்லைகளை ஒதுக்குகிறவர்களுக்கு ஒப்பானார்கள்; அவர்கள்மேல் என் உக்கிரகோபத்தைத் தண்ணீரைப்போல ஊற்றுவேன்.**

பூர்வ எல்லைக்குறிகளை ஒற்றிப்போடுவதால் தலைவர்களே குற்றவாளிகளாகத் தீர்க்கப்பட்டார்கள் மற்றும் அவர்கள் தேவனுடைய நியாயத்தீர்ப்பைப் பெற்றனர். "பூர்வ எல்லைக்குறிகள்" என்ற சொல்லும் முன்னர் மேற்கோள் காட்டப்பட்ட வேத பகுதிகளும் சொத்து பற்றிய நேரடி எல்லைகளைக் குறிக்கின்றன என்பதை நாம் அறிந்திருந்தாலும், இதை ஆவிக்குரிய விஷயங்களுக்கு மொழிபெயர்த்து இந்தப் புத்தகத்தின் பின்னணியாகப் பயன்படுத்த விரும்புகிறேன்.

பூர்வ அடையாளங்கள் என்பது முந்தைய தலைமுறையினரால் அமைக்கப்பட்ட எல்லைகளாகும், அவை பின்வருவனவற்றைக் குறிக்கின்றன

- நடப்பதற்குப் பாதுகாப்பான பகுதிகள் மற்றும் நடக்கக்கூடாத தடை செய்யப்பட்ட பகுதிகள்
- உங்களை வஞ்சித்து தடைசெய்யப்பட்ட பகுதிகளுக்கு அழைத்துச் செல்ல சாத்தியமுண்டு.

மாறிவரும் உலகில், நாம் ஒற்றிவைக்கக்கூடாத பூர்வ எல்லைக்குறிகள் உள்ளன என்பதை நாம் நினைவில்கொள்ள வேண்டும். நாம் கடக்கக்கூடாத பரிசுத்தமான எல்லைகள் உள்ளன. நாம் இழக்கக்கூடாத தெய்வீக பாரம்பரியங்கள் உள்ளன.

## நாம் இழக்கக்கூடாத தெய்வீக பாரம்பரியங்கள்

ஒன்றுக்கும் உதவாததும் தகர்க்கப்பட வேண்டியதுமான, மனுஷனால் உருவாக்கப்பட்ட மரபுகள் உள்ளன என்றாலும், தெய்வீகமான, வேதாகம மரபுகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பது உண்மை. இவை கால கட்டுப்பாடுகளைக் கடந்து நிற்பவை.

### *மனுஷனால் உருவாக்கப்பட்ட பாரம்பரியங்கள்*

தேவனுடனான நமது பயணத்தில், எந்தப் பலனையும் தராதவைகளாகிய மனுஷனால் உருவாக்கப்பட்ட பாரம்பரியங்களை நிராகரிக்க நமக்கு உரிமை உண்டு. மனுஷனால் உருவாக்கப்பட்ட பாரம்பரியங்கள் நம் வாழ்வில் தேவனுடைய

வார்த்தையைப் பொய்யாக்குகின்றன, மேலும் நம்மை வஞ்சகம் மற்றும் அடிமைத்தனத்தின் எல்லைகளுக்கு அழைத்துச் செல்கின்றன.

மாற்கு 7:13
**நீங்கள் போதித்த உங்கள் பாரம்பரியத்தினால் தேவவசனத்தை அவமாக்குகிறீர்கள். இதுபோலவே நீங்கள் மற்றும் அநேக காரியங்களையும் செய்கிறீர்கள் என்று சொன்னார்.**

கொலோசெயர் 2:8
**லௌகிக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும், ஒருவனும் உங்களைக் கொள்ளைகொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; அது மனுஷர்களின் பாரம்பரிய நியாயத்தையும் உலகவழிபாடுகளையும் பற்றினதேயல்லாமல் கிறிஸ்துவைப்பற்றினதல்ல.**

## *தெய்வீக மரபுகள்*

எவ்வாறாயினும், நாம் கடைப்பிடிக்க வேண்டிய தெய்வீக பாரம்பரியங்கள் உள்ளன என்பதையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

1 கொரிந்தியர் 11:2
**சகோதரரே, நீங்கள் எல்லாவற்றிலும் என்னை நினைத்துக்கொண்டு, நான் உங்களுக்கு ஒப்புவித்தபடி நீங்கள் கட்டளைகளைக் கைக்கொண்டு வருகிறதினிமித்தம் உங்களைப் புகழுகிறேன்.**

2 தெசலோனிக்கேயர் 2:15
**ஆகையால், சகோதரரே, நீங்கள் நிலைகொண்டு, வார்த்தையினாலாவது நிருபத்தினாலாவது நாங்கள் உங்களுக்கு உபதேசித்த முறைமைகளைக் கைக்கொள்ளுங்கள்.**

2 தெசலோனிக்கேயர் 3:6
**மேலும், சகோதரரே, எங்களிடத்தில் ஏற்றுக்கொண்ட முறைமையின்படி நடவாமல், ஒழுங்கற்று நடக்கிற எந்தச் சகோதரனையும் நீங்கள் விட்டு விலகவேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே, உங்களுக்குக் கட்டளையிடுகிறோம்.**

## உலகத்துடன் தொடர்புடையவர்களாய் இருத்தல்

காத்து நடக்க வேண்டிய பூர்வ எல்லைக்குறிகள், நாம் கடக்கக் கூடாத புனிதமான எல்லைகள் மற்றும் நாம் இழக்கக் கூடாத தெய்வீக பாரம்பரியங்கள் முதலியன உள்ளன என்பதைப் புரிந்துகொண்ட பின்பு, நாம் இப்போது-தொடர்பு என்ற மிகவும் சுவாரஸ்யமான ஒரு பிரச்சனையை சந்திக்கிறோம்.

## *புதிய உலகில் மாறிவரும் கலாச்சாரத்தில், நாம் எவ்வாறு தொடர்புடையவர்களாக இருந்துகொண்டே, பூர்வ எல்லைக்குறிகளைக் காத்து நடக்க முடியும்*

நடுத்தர வயதில் உள்ள கிறிஸ்தவர்களாக, நம்மை நாமே கண்டுபிடிக்கும் புதிய உலகத்தின் கலாச்சாரத்துடன் நாம் போராடுகிறோம். மிகவும் மாறுபட்ட உலகக் கண்ணோட்டம் மற்றும் கலாச்சாரம் கொண்ட உலகில் நாம் வளர்ந்துவந்தோம் என்ற உண்மையினால், பின்வரும் வேதவசனங்களை தற்போதைய கலாச்சாரத்திற்கு ஏற்ப எவ்வாறு பயன்படுத்துவது என்று இப்போது நமக்குத் தெரிவதில்லை:

- உலகத்தில் இருந்தும் *"உலகத்திற்குரியவர்களாய் இல்லாதிருத்தல்"* (யோவான் 17:14-18) என்றால் என்ன?
- நாம் உலகத்துடன் தொடர்புடையவர்களாக இருந்தும், *"உலகத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல் இருப்பது"* (ரோமர் 12:1,2) எப்படி?
- உலகத்துடன் நாம் தொடர்புகொள்கிறோம் என்றாலும், உலக சிநேகத்தைக் கொண்டிராமல் இருப்பது (யாக்கோபு 4:4) எப்படி?
- அன்றாட வாழ்க்கையை அனுபவித்து மகிழ்ந்தாலும், நாம் உலகத்தை நேசிக்காமல் நம்மைப் பாதுகாத்துக்கொள்வது (1 யோவான் 2:15-17) எப்படி?

இவை நாம் போராடும் சில பிரச்சினைகள்.

நாம் இந்த உலகத்திற்குள் அனுப்பப்பட்டிருப்பதால், நாம் உலகத்திற்கு வெளியே வாழ முடியாது என்பது நமக்குத் தெரியும். நாம் இருக்கிற இந்த புதிய உலகின் கலாச்சாரத்தை எப்படி எதிர்கொள்வது? இந்த உலகத்திற்கு நாம் எவ்வாறு பதிலளிப்போம்? நம் இளம் வாலிபர்கள் மற்றும் குழந்தைகள் மாறிவரும் கலாச்சாரத்தில் உருவானதும் நமக்கு அவ்வளவு பரிச்சயமில்லாததுமான ஒரு புதிய உலகில் வளரும்போது அவர்களுக்கு என்ன கற்பிக்கிறோம்?

- புதிய உலகின் கலாச்சாரத்திலிருந்து நாம் துண்டிக்கப்பட்டால், அதன் மீது நம்மால் தாக்கத்தை ஏற்படுத்தவோ, அதை மேம்படுத்தவோ அல்லது மாற்றவோ முடியாது.

- புதிய உலகின் கலாச்சாரத்திற்கு நாம் முழுமையாக ஒத்துப்போனால், அதில் உள்ள தவறுகளை நம்மால் சரிசெய்ய முடியாது.
- காலத்தால் அழியாத சத்தியங்களையும் கொள்கைகளையும் விளக்கி, அவற்றை நிலைநிறுத்தும்படிக்கு, புதிய உலகின் மாறிவரும் கலாச்சாரத்தை நாம் ஆராய்ந்து, புரிந்துகொண்டு, பயன்படுத்த வேண்டும்.

கலாச்சாரம் என்பது நல்லது என்றும் சொல்ல முடியாது அல்லது கெட்டது என்றும் சொல்ல முடியாது. மாறாக, ஒவ்வொரு கலாச்சாரத்திலும் நல்லவைகளும் உள்ளன கெட்டவைகளும் உள்ளன, அவை பகுத்தறிந்து புத்திசாலித்தனமாகக் கையாளப்பட வேண்டும். இங்கே பவுல் தேவனுடைய இருதயத்தைத் தெரிவிக்கும்போது கூறினார்.

1 கொரிந்தியர் 9:19-23

**[19] நான் ஒருவருக்கும் அடிமைப்படாதவனாயிருந்தும், நான் அதிக ஜனங்களை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு, என்னைத்தானே எல்லாருக்கும் அடிமையாக்கினேன்.**

**[20] யூதரை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு யூதருக்கு யூதனைப்போலவும், நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவர்களை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவனைப்போலவுமானேன்.**

**[21] நியாயப்பிரமாணமில்லாதவர்களை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு அவர்களுக்கு நியாயப்பிரமாணம் இல்லாதவனைப்போலவுமானேன். அப்படியிருந்தும், நான் தேவனுக்குமுன்பாக நியாயப்பிரமாணமில்லாதவனாயிராமல், கிறிஸ்துவின் பிரமாணத்துக்குள்ளானவனாயிருக்கிறேன்.**

**[22] பலவீனரை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்குப் பலவீனருக்குப் பலவீனனைப்போலானேன். எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன்.**

**[23] சுவிசேஷத்தில் நான் உடன்பங்காளியாகும்படிக்கு, அதினிமித்தமே இப்படிச் செய்கிறேன்.**

1 கொரிந்தியர் 9 வது அதிகாரத்திலிருந்து மேற்கோள் காட்டப்பட்ட வேதவசனங்கள், நம்மைச் சுற்றியுள்ளவர்களுக்கு நாம் பொருத்தமானவர்களாக—எல்லா மனுஷர்களுக்கும் எல்லாமுமாக இருப்பதைப் பற்றி நமக்குப் போதிக்கும் மிக முக்கியமான பத்திகளாக இருக்கின்றன. எப்பேர்ப்பட்ட மக்களிடம் ஊழியம் செய்ய வேண்டுமோ அவர்களைப்போல நாம்

மாறுவதையும், பவுல் தான் வாழ்ந்த காலத்தில் உணர்ந்தாரானால், நாமும் அவ்வாறு செய்ய வேண்டியது அவசியம் என்று உறுதியாக நம்புகிறேன்!

1 **கொரிந்தியர்** 10:32,33

32 **நான் என் சுயபிரயோஜனத்தைத் தேடாமல், அநேகருடைய பிரயோஜனத்தைத் தேடி, அவர்கள் இரட்சிக்கப்படும்படிக்கு, எவ்விதத்திலும் எல்லாருக்கும் பிரியமாய் நடக்கிறதுபோல,**

33 **நீங்களும் யூதருக்கும், கிரேக்கருக்கும், தேவனுடைய சபைக்கும் இடறலற்றவர்களாயிருங்கள்**

1 கொரிந்தியர் 10:32,33 ஆகிய வசனங்கள் அப்போஸ்தலனாகிய பவுல் 1 கொரிந்தியர் 9:19-23 இல் முன்பு விவாதித்தவற்றின் வெளிச்சத்தில் புரிந்துகொள்ளப்பட வேண்டும். எல்லாக் காரியங்களிலும் எல்லாரையும் பவுல் பிரியப்படுத்துவதற்கான காரணம் தனிப்பட்ட ஆதாயத்திற்காகவோ அல்லது ஜனங்களைத் தன் வசம் இழுப்பதற்காகவோ அல்ல, மாறாக கிறிஸ்துவை விசுவாசிக்கும்படி அவர்களை வழிநடத்துவதற்காகததான்.

*காலத்தால் அழியாத சத்தியங்களை கலாச்சாரத்தைப் பயன்படுத்திச் சொல்வதுதான் பொருத்தம். காலத்தால் அழியாததைச் சொல்ல நாம் கலாச்சாரத்தைப் பயன்படுத்த வேண்டும்*—ரெஜி ஜாய்னர் ஃபேமிலிவைஸின் நிறுவனர்.

உலகம் மாறிக்கொண்டிருக்கிறது. நேற்று வாய்த்தவை இன்று வாய்க்காமல் போகலாம்! நாம் புதிய உலகத்திற்கு ஏற்ப மாற வேண்டும். புதிய உலகின் கலாச்சாரத்தின் ஒரு பகுதியாக இருக்கும் குறியீடுகள் மற்றும் மொழியைப் பயன்படுத்தி நித்திய சத்தியங்களை நாம் முன்வைக்க வேண்டும். ஆனாலும் கூட, அவ்வாறு செய்வதில் ஆபத்துகள் உள்ளன, அதைப் பற்றி நாம் அறிந்திருக்க வேண்டும். காலத்தால் அழியாத சத்தியங்களை அறிவிப்பதற்கு, நாம் கலாச்சாரத்திலிருந்து விஷயங்களை அப்படியே எடுத்து பயன்படுத்த முடியாது. புதிய உலகின் கலாச்சாரத்தைப் பயன்படுத்தும், ஈடுபடுத்தும் மற்றும் பிரயோஜனப்படுத்திக்கொள்ளும் நமது முயற்சியின் விளைவாக பூர்வ எல்லைக்குறிகளோடு நாம் சமரசம் செய்துகொள்ள முடியாது.

# 4

# நமது பூர்வ எல்லைக்குறிகள்

வாழ்க்கையின் பல முக்கியமான பகுதிகளில் வீசும் சில மாற்றத்தின் காற்றுகள், அந்தப் பகுதிகளில் உள்ள நமது பூர்வ எல்லைக்குறிகளை நமக்கு நினைவூட்டுவதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

- தனிப்பட்ட வாழ்க்கை மற்றும் குணநலன்
- திருமணம் மற்றும் குடும்பம்
- பணியிடம்
- திருச்சபை வாழ்க்கை
- ஊழியம்

நம் பாய்மரங்களை சரிசெய்து மாற்றியமைத்துக்கொண்டு, சிலவகை காற்று நம்மை அழைத்துச் செல்லும் திசையை நோக்கி நாம் செல்ல வேண்டியிருக்கிறது, இல்லையெனில், நாம் பின்தங்கிப்போய் தற்போதைய புதிய உலகத்திலிருந்து துண்டிக்கப்படுவோம். பின்னர், சில மாற்றங்களின் காற்றுகள் ஒரு குறிப்பிட்ட திசையில் வீசி, நாம் பரிசுத்த எல்லைகளைக் கடந்துபோய்விடும்படியும், தெய்வீக பாரம்பரியங்களை இழந்துபோகும்படியும் செய்கின்றன. புயல்கள் மத்தியில் நம்மை நங்கூரம்போல் நிலையாக நிற்கவைப்பதற்கு நாம் பூர்வ எல்லைக்குறிகளைப் பயன்படுத்தி இந்த மாற்றத்தின் காற்று வழியாக செல்லக் கற்றுக்கொள்ள வேண்டும்.

இந்தப் புத்தகத்தில் மாற்றத்தின் அனைத்து பகுதிகளையும் வாழ்க்கையின் அனைத்து பகுதிகளையும் எடுத்துரைப்பது எனது நோக்கம் அல்ல. எனது எண்ணம், போதுமான ஞானத்தையும் புரிதலையும் உங்களுக்குக் கற்பிப்பதாகும், இதனால் இனி வரும் ஆண்டுகளில் நம் மீது வீசும் காற்றை அல்லது நம்மீது வரக்கூடிய மாற்றத்தின் காற்றை நாம் எவ்வாறு எதிர்கொண்டு அதற்கு பதிலளிப்பது என்பதை நாம் அறிவோம். புனித எல்லைக்குறிகளைக்

கடக்காமலும், தெய்வீக பாரம்பரியங்களை இழக்காமலும், பூர்வ எல்லைக்குறிகளுக்குள் நாம் நிலைத்திருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

மாற்றத்திற்கு சரியாக பதிலளிக்கும் திறனை நாம் கொண்டிருக்க வேண்டும் என்று நான் விரும்புவது மட்டுமல்லாமல், இந்த பூர்வ எல்லைக்குறிகளை நம் உலகிற்குள் எடுத்துச் செல்வதன் மூலம் மாற்றத்தின் காற்றினால் சீர்கேடு அடைந்து வரும் நமது உலகின் சில பகுதிகளை, நாம் சரிசெய்யும்படியான சவால்களை எதிர்கொள்ள வேண்டும் என்றும் விரும்புகிறேன். வணிகம், அரசாங்கம், கல்வி, விளையாட்டு, ஊடகம், பொழுதுபோக்கு, ஃபேஷன் உலகம் மற்றும் எல்லா இடங்களிலும் பூர்வ எல்லைக்குறிகள், புனித எல்லைகள் மற்றும் தெய்வீக பாரம்பரியங்களின்படி வாழும் ஜனங்களைக் கற்பனைசெய்து பாருங்கள். நாம் உண்மையாகவே உலகத்திற்கு உப்பாகவும் வெளிச்சமாகவும் இருப்போம்!

**வேதாகமத்துடன் இணைந்திருங்கள்**—இதுவே உங்களுக்கான எனது அழைப்பு வேதாகமம் மட்டுமே நமது பூர்வ எல்லைக்குறியாகும்!

சத்தியம் தனித்தன்மையுடையது. சத்தியம் மாறாதது. தேவனுடைய வார்த்தை சத்தியமாய் இருக்கிறது (யோவான் 17:17). தேவன் நமக்கு வழங்கும் அறிவுரைகள் அவைகளுடன் தொடர்புடையவை அல்ல. அந்த அறிவுரைகள் அறுதியானது. தேவன் என்ன அர்த்தத்தில் சொன்னார் என்று நாம் வாக்களிப்பு எடுக்க முடியாது! தேவன் என்ன சொன்னாரோ அதைத்தான் சொன்னார், அவர் என்ன சொன்னாரோ அதைத்தான் அர்த்தப்படுத்தினார். அவர் சொன்னதை நாம் பின்பற்றுகிறோம்.

## தனிப்பட்ட வாழ்க்கை மற்றும் குணநலன்களுக்கான பூர்வ எல்லைக்குறிகள்

### *பரிசுத்தம்*

1 பேதுரு 1:14-16

**14 நீங்கள் முன்னமே உங்கள் அறியாமையினாலே கொண்டிருந்த இச்சைகளின்படியே இனி நடவாமல், கீழ்ப்படிகிற பிள்ளைகளாயிருந்து,**

**15 உங்களை அழைத்தவர் பரிசுத்தராகியிருக்கிறதுபோல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்.**

**16 நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள் என்று எழுதியிருக்கிறதே.**

**எபிரெயர்** 12:14
**யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள். பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே.**

பரிசுத்தமாக இருப்பதென்றால் "தேவனுக்காக பிரித்தெடுக்கப்படுதல்" என்று அர்த்தமாகும். நான் தேவனுக்கு சொந்தமான ஒரு நபர் என்று அர்த்தமாகும். எனவே, நான் சொல்லும் வார்த்தைகள் மற்றும் செய்யும் செயல்கள் அனைத்தும் தேவனைப் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும், தெய்வீகத் தன்மையுடன் இருக்க வேண்டும், தெய்வீகத்தை வெளிப்படுத்த வேண்டும்.

நாம் சொல்லும் வார்த்தைகள், செய்யும் செயல்கள், உடுத்தும் உடைகள் போன்றவற்றை இந்தத் தரநிலையின்படி தீர்மானிக்க வேண்டும். இன்னும், பரிசுத்தம் பற்றிய நமது தரநிலைகள், அதே தரநிலைகளைக் கொண்டிராதவர்களிடமிருந்து நம்மைத் தனிமைப்படுத்திக்கொள்வதைநோக்கமாகக்கொண்டிருப்பதில்லை. நாம் அவர்களால் தாக்கத்திற்கு உள்ளாகிவிடாமல் அவர்களுடன் தொடர்பில் இணைந்திருக்க வேண்டும்.

இயேசு எவ்வித தயக்கமுமின்றி வரி வசூலிப்பவர்களுடனும் பாவிகளுடனும் சேர்ந்து உட்கார்ந்து சாப்பிடுகிறார் என்பதை நினைவில் கொள்ளுங்கள் (மத்தேயு 9:11). இதன் அர்த்தம், அவர்கள் அணிவதை ஓரளவுக்கு என்னால் அணிய முடியும், அவர்களைப் போல மணம் வீசவும், அவர்களைப் போலவே தோற்றமளிக்கவும் முடியும், ஆனாலும், தேவனுக்கு முன்பாக பரிசுத்தமாக வாழும்படி நாம் கொண்டிருக்கும் நமது தனிப்பட்ட தரத்தை இழந்துவிடக் கூடாது.

உலகின் எந்தப் பகுதியில் நாம் வாழ்ந்தாலும், எந்தக் கலாச்சாரத்தை நாம் கடைப்பிடித்தாலும் பரிசுத்தம் என்பது நமக்கான ஒரு பூர்வ எல்லைக்குறியாகும்!

பரிசுத்தத்திற்கான தேவனுடைய தரநிலைகள் அறுதியானது. தேவ பிள்ளைகள் உலகின் எந்தப் பகுதியில் வாழ்ந்தாலும், எந்தக் கலாச்சாரத்தைப் பின்பற்றினாலும் தேவனின் பரிசுத்த தரநிலைகள் ஒரே மாதிரியானவைகளாக இருக்கின்றன விசுவாசிகளாக, நம்முடைய சொந்த ஒழுக்க நெறிமுறைக்கான தரங்களை நாமே வரையறுக்க முடியாது. அவை தேவனுடைய

வார்த்தையில் வரையறுக்கப்பட்டு நமக்குக் கொடுக்கப்பட்டுள்ளன. நம்முடைய சொந்த ஒழுக்க நெறிமுறைக்கான தரங்களை நாமே வரையறுக்கிறோம் என்றும் அந்தத் தரநிலை கலாச்சாரத்திற்கு கலாச்சாரம் மாறுபடும் என்றும் சிலர் பிரசங்கித்து போதிக்கும் அளவிற்கு திருச்சபைக்குள் ஊடுருவிய தார்மீக சார்புவாதத்தின் பிந்தைய–நவீனத்துவ தத்துவம் குறித்து நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். அவ்வாறு இருக்க முடியாது! உலகின் அனைத்து பகுதிகளுக்கும் வேதாகமத்தின் போதனைகள் ஒரே மாதிரியானவைகளாய் இருக்கின்றன, தேவன் தம்முடைய பிள்ளைகள் அனைவருக்கும் ஒரே மாதிரியான போதனைகளைத்தான் கூறுகிறார்!

ஸ்திரீகளே, நீங்கள் உடை உடுத்தும் விதமானது– அடக்கம் மற்றும் தெய்வீகம் ஆகிய இரண்டு முக்கியமான விஷயங்களை வெளிப்படுத்த வேண்டும் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

1 **தீமோத்தேயு** 2:9,10

9 **ஸ்திரீகளும் மயிரைப் பின்னுதலினாலாவது, பொன்னினாலாவது, முத்துக்களினாலாவது, விலையேறப்பெற்ற வஸ்திரத்தினாலாவது தங்களை அலங்கரியாமல்,**

10 **தகுதியான வஸ்திரத்தினாலும், நாணத்தினாலும், தெளிந்த புத்தியினாலும், தேவபக்தியுள்ளவர்களென்று சொல்லிக்கொள்ளுகிற ஸ்திரீகளுக்கு ஏற்றபடியே நற்கிரியைகளினாலும், தங்களை அலங்கரிக்கவேண்டும்.**

ஆடை அணிவதில் அடக்கம் என்பது வெவ்வேறு கலாச்சாரங்களில் வேறுபட்டதாக இருக்கிறது என்று என்னிடம் சிலர் வாதிடலாம் என்பதை நான் உணர்கிறேன். ஒரு கலாச்சாரம் நாகரீகமற்றது என்று கருதப்படுவது மற்றொரு கலாச்சாரத்தில் முற்றிலும் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதாக இருக்கிறது என்று அவர்கள் கூறுவார்கள். எனது பதில் இரண்டு விதத்தில் இருக்கும். முதலாவதாக, தேவனுடைய பார்வையில் மிகவும் விலையேறப்பெற்ற நபரான, *"இருதயத்தில் மறைந்திருக்கிற நபரை"* (1 பேதுரு 3:4அ) அழகுபடுத்துவதிலும் வெளிப்படுத்திக் காட்டுவதிலும் பெண்கள் கவனம் செலுத்தும்படி வேதவசனங்கள் நமக்கு அழைப்பு விடுக்கின்றன. எனவே, கலாச்சாரத்தைப் பொருட்படுத்தாமல், ஒரு விசுவாசியான பெண்ணின் கவனம் இதிலேதான் இருக்க வேண்டும். இரண்டாவதாக, நீங்கள் வாழும் கலாச்சாரத்தின் சூழலுக்கு ஏற்றவாறு அடக்கமாக உடை உடுத்துங்கள்.

## *உத்தமம்*

**நீதிமொழிகள்** 10:9
**உத்தமமாய் நடக்கிறவன் பத்திரமாய் நடக்கிறான்; கோணலான வழிகளில் நடக்கிறவனோ கண்டுபிடிக்கப்படுவான்.**

நம் வாழ்வின் எந்தப் பகுதியிலும் உத்தமம் மற்றும் நேர்மை ஆகிய விஷயங்களில் நாம் சமரசம் செய்துகொள்ள முடியாது. சூழ்நிலைகள் எவ்வளவு அதிகமாக நம்மை நிர்பந்தப்படுத்தினாலும், நாம் கடக்கக் கூடாத எல்லையாக இது இருக்கிறது.

## *கடின உழைப்பு*

**நீதிமொழிகள்** 10:4
**சோம்பற்கையால் வேலைசெய்கிறவன் ஏழையாவான்: சுறுசுறுப்புள்ளவன் கையோ செல்வத்தை உண்டாக்கும்.**

நாம் சில நேரங்களில், ஜனங்கள் பெற்ற உடனடி வெற்றிகளால் மயங்குகிறோம். இரண்டாவது வலை ஏற்றத்தின் நட்சத்திரம் என்று அறியப்படும் 23 வயதான, மார்க் ஸுக்கர்பெர்க் என்பவரான, Facebook.com/ அதாவது முகநூல் புத்தகத்தின் நிறுவனர், படிப்பை பாதியில் நிறுத்திவிட்டு ஹார்வர்ட் பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறியவராய் இருந்தார், இந்தப் புத்தகத்தை எழுதும்போது ஒன்றரை கோடிக்கும் அதிகமான மதிப்புடைய சொத்து உடையவராய் இருந்தார். ஒரே ஒரு நல்ல யோசனையினால், நான்கு ஆண்டுகளில், அவர் கிட்டத்தட்ட அதிகப்படியான வெற்றியை சீக்கிரத்தில் அடைந்தார்!

உடனடி வெற்றிகளின் கதைகளைக் கேட்பதும் பார்ப்பதும் சில சமயங்களில் எளிதாக குறுக்கு வழியில் சம்பாதிப்பதற்காக பாதையைத் தேடும் நிலைக்கு நம்மைத் தள்ளுகிறது. கடின உழைப்பு இனி பொருத்தமானதாகத் தெரிவதில்லை. ஆனால் "பூர்வ எல்லைக்குறிகளானது" சோம்பற்கையால் வேலை செய்தால் நீங்கள் ஏழையாகிவிடுவீர்கள் என்று கூறுகிறது. விடாமுயற்சியே வெற்றியைக் காணச்செய்யும்.

விப்ரோ நிறுவனத்தின் தலைவர் அசிம் பிரேம்ஜி வாரத்திற்கு சராசரியாக 80 மணி நேரம் வேலை செய்கிறார் என்பது உங்களுக்குத் தெரியுமா? அவரது குழுவில் ஒருவரை ஒரு அங்கத்தினராக சேர்த்துக்கொள்ள விரும்பும்போது, அவருடைய

கேள்விகளில் ஒன்று, "வாரத்தில் எத்தனை மணிநேரம் வேலைக்காக செலவிடுவீர்கள்?" என்பதாகவே இருக்கிறது. தலைவருடன் நேரடியாகப் பணியாற்ற விரும்பும் எவரும் வாரத்தில் 60 முதல் 70 மணிநேரம் வரை வேலை செய்யத் தயாராக இருக்க வேண்டும்! எங்கள் வேலையை மிகைப்படுத்த நான் அனைவரையும் ஊக்குவிக்கவில்லை, ஆனால் வெற்றி அவ்வளவு எளிதானது அல்ல என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன்!

## *முன்னுரிமைகள்*

அனைத்தும் ஒன்றுக்கொன்று தொடர்புடையதும் விளக்கத்திற்கு உட்பட்டதுமாய் இருக்கிறது என்ற கண்ணோட்டத்தில் உள்ள உலகில் நமது முன்னுரிமைகள் தொடர்ந்து சவாலுக்கு உள்ளாகின்றன.

மாற்கு 12:29-31 மற்றும் மத்தேயு 6:33 இன்றைக்கும் அதே காரியங்களை போதிக்கின்றன, மேலும் வாழ்க்கையில் நாம் கடைப்பிடிக்கும்படி முன்னுரிமையளிக்க வேண்டிய பூர்வ எல்லைக்குறிகள் இன்னும் உண்டு.

மாற்கு 12:29-31

29 **இயேசு அவனுக்கு பிரதியுத்தரமாக: கற்பனைகளிலெல்லாம் பிரதான கற்பனை எதுவென்றால்: இஸ்ரவேலே கேள், நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்.**

30 **உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக என்பதே பிரதான கற்பனை.**

31 **இதற்கு ஒப்பாயிருக்கிற இரண்டாம் கற்பனை என்னவென்றால்: உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோல் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக என்பதே: இவைகளிலும் பெரிய கற்பனை வேறொன்றுமில்லை என்றார்.**

மத்தேயு 6:33

**முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக்கூடக் கொடுக்கப்படும்.**

விசுவாசிகளாகிய நம்மைப் பொறுத்தவரை, தேவன் மீதான நமது அன்பு மற்றும் ராஜ்யத்தைப் பின்தொடர்தல் போன்றவை, தனிப்பட்ட வசதிகள், சுய லட்சியங்கள் மற்றும் பல விஷயங்களுக்கும் மேலாக முக்கியம் வாய்ந்ததாக, பட்டியலில் முதலிடத்தை வகிக்கிறது. ஒரு மனுஷனின் மதிப்பு அவனுக்குச் சொந்தமான பொருட்களை வைத்து மட்டுமே இந்த உலகில் அளவிடப்படுகிறது, நம்மிடம் உள்ள பொருட்களை விட நாம் யார் என்பதுதான் முக்கியம் என்பதை நாம் புரிந்துகொள்கிறோம்!

**லூக்கா** 12:15
**பின்பு அவர் அவர்களை நோக்கி: பொருளாசையைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள், ஏனெனில் ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல என்றார்.**

### *சாட்சி*

நாம் எப்பொழுதும் நமது சாட்சிகளைக் காத்துக்கொள்ள வேண்டும். நம்மை சுற்றியவர்களிடம் ஒரு வார்த்தை கூட பேசாவிட்டாலும் நம்முடைய செய்முறை, அணுகுமுறைகள் மற்றும் நடத்தை அவர்கள் முன் நம் வாழ்க்கையில் சாட்சியாக அமைகின்றன. நிந்திக்கப்படுவதற்கு இடமளிக்காமல் நம் சாட்சியைக் காத்துக்கொள்ள நாம் எவ்விதத்திலும் முயற்சி செய்ய வேண்டும், அதாவது, யாராலும் குற்றஞ்சாட்ட முடியாத ஒரு வாழ்க்கையை நாம் வாழ வேண்டும். நாம் வாழும் வழியானது நாம் பின்பற்றும் தேவனுடைய துதியை வெளிப்படுத்திக்காட்டுவதாய் இருக்க வேண்டும் (1 பேதுரு 2:9).

## திருமணம் மற்றும் குடும்பத்திற்கான பூர்வ எல்லைக்குறிகள்

### *திருமணம்*

**எபிரெயர்** 13:4
**விவாகம் யாவருக்கும் கனமுள்ளதாயும், விவாகமஞ்சம் அசுசிப்படாததாயுமிருப்பதாக. வேசிக்கள்ளரையும் விபசாரக்காரரையும் தேவன் நியாயந்தீர்ப்பார்.**

நாம் கர்த்தருடைய விசுவாசிகளாக, திருமணம் என்பது தேவனால் நியமிக்கப்பட்ட ஒரு நியமம் என்பதைப் புரிந்துகொள்கிறோம். இது வாழ்நாள் முழுவதுக்குமான ஒரு உடன்படிக்கையாய் இருக்கிறது. இது நாம் ஒற்றிவைக்கக் கூடாத ஒரு பூர்வ எல்லைக்குறியாகும். டேட்டிங் செய்பவர்களுக்குச் சொல்வதென்றால், உங்களுக்குத் திருமணம் ஆகும் வரை நீங்கள் இன்னும் திருமணம் செய்துகொள்ளவில்லை என்பதை நினைவில்கொள்ளுங்கள்! திருமணத்தின் பொறுப்பில் நுழைவதற்கு முன்பு நீங்கள் திருமணமானவரின் உரிமைகளைப் பயன்படுத்த முடியாது. திருமணமானவர்களுக்குச் சொல்வதென்னவென்றால், உங்கள் திருமணம் இருவருக்கும், அதாவது உங்கள் இருவருக்காக மட்டுமே வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதை நினைவில்கொள்ளுங்கள். உங்கள் இணைப்பு வட்டத்தைக் காத்துக்கொள்ளுங்கள்.

## *குடும்பம்*

குடும்பம் என்பது தேவனால் உருவாக்கப்பட்ட வடிவமைப்பு. நீங்கள் உங்கள் குடும்பத்திற்கு ஊழியம் செய்யும்போது, தேவனால் நியமிக்கப்பட்ட ஊழியத்தை நீங்கள் நிறைவேற்றுகிறீர்கள், நீங்கள் செய்யும் மற்ற வகையான ஊழியத்தை (பிரசங்கித்தல், தீர்க்கதரிசனம் சொல்லுதல் அல்லது அற்புதங்களைச் செய்தல்) செய்து நிறைவேற்றுவது போலவே தேவனால் நியமிக்கப்பட்ட இந்த ஊழியத்தையும் செய்கிறீர்கள். எனவே, ஒருவருடைய குடும்பத்திற்கு ஊழியம் செய்வது என்பது ஒரு பூர்வ எல்லைக்குறியாகும், நாம் அதை தவிர்த்துவிட முடியாது. நம் குடும்பங்களில் முதலீடு செய்வதற்கு நாம் முன்னுரிமை அளிக்க வேண்டும்.

தேவனுடைய விசுவாசிகளாக, தேவனால் வடிவமைக்கப்பட்ட ஒரு பகுதியாக (உள்ளூர் திருச்சபையின்) ஒரு பெரிய சமூகமாக நாம் இருக்கிறோம் என்று நம்புகிறோம், ஆகவே, நமக்கான எல்லை எங்கு இருக்கிறது என்பதை அறிந்துகொள்வதில் நாம் கவனமாக இருக்க வேண்டும். பெரிய திருச்சபையாகிய சமூகத்தில் குடும்பம் தன் முக்கியத்துவத்தை இழந்துபோக நாம் அனுமதிக்க கூடாது.

## *பெற்றோரைப் போற்றுதல்*

**நீதிமொழிகள்** 1:8,9

8 **என் மகனே, உன் தகப்பன் புத்தியைக் கேள், உன் தாயின் போதகத்தைத் தள்ளாதே.**
9 **அவைகள் உன் சிரசுக்கு அலங்காரமான முடியும், உன் கழுத்துக்குச் சரப்பணியுமாயிருக்கும்.**

நம் பெற்றோரை கனம்பண்ணுவதும், அவர்களுக்கு மரியாதை அளிப்பதும், சேவை செய்வதும் பழங்காலப் பழக்கமாகத் தோன்றலாம். விசுவாசிகளாகிய நாம், நம் பெற்றோரைக் கனப்படுத்த வேண்டும் என்று தேவனுடைய வார்த்தையில் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது (எபேசியர் 6:1-3). இது நாம் நிராகரிக்கக் கூடாத தெய்வீக பாரம்பரியமாகும்.

# 5

# பணியிடத்திற்கான பூர்வ எல்லைக்குறிகள்

தனிப்பட்ட வாழ்வு மற்றும் குணநலன்களுக்கு நாம் விவாதித்த அதே பூர்வ எல்லைக்குறிகள் பணியிடத்திற்கும் பொருந்தும். இந்த பூர்வ எல்லைக்குறிகளை உங்கள் தொழில் தொடர்பான உலகத்திற்குள் எடுத்துச் செல்லுங்கள். இந்தப் பூர்வ எல்லைக்குறிகளை மீறும்படி நீங்கள் சமரசம் செய்ய புதிய உலகின் கலாச்சாரத்தை அனுமதிக்காதீர்கள்.

## சுதந்திரம்

இன்று, ஊழியர்களை வெறும் "தொழிலாளர்களாய் மட்டும் இருப்பவர்கள்" என்று அல்லாமல் நிறுவனத்தின் ஒரு பங்காக இருப்பவர்களைப் போல உணரச் செய்ய, பணியிடத்தில் அனைத்து வகையான முறைகளையும் பெயரிடலையும் நாம் பயன்படுத்துகிறோம். ஜனங்கள் சுதந்திரமாக இருக்க வேண்டும் என்றும், இன்னும் அதிகமாக செயல்பட வேண்டும் என்றும் நாம் விரும்புகிறோம். பல நேரங்களில், சுதந்திரம் என்பது ஒழுங்கின்மை என்று ஊழியர்கள் தவறாகப் புரிந்துகொள்கிறார்கள்.

சுதந்திரம் என்பது ஒழுங்கின்மை அல்ல. சுதந்திரம் என்பது பொறுப்பற்று இருத்தல் அல்ல. நீங்கள் அலுவலகத்திலிருந்து எப்போது வர வேண்டும், அலுவலகத்திலிருந்து எப்போது திரும்பிச் செல்ல வேண்டும், எவ்வளவு பணம் உங்களுக்கு கொடுக்கப்பட வேண்டும், தனிப்பட்ட செலவுகளுக்கு நீங்கள் எவ்வளவு செலவு செய்துவிட்டு நிறுவனத்திற்கு கட்டணச் சீட்டை வைக்கிறீர்கள் போன்றவற்றை முடிவு செய்வது சுதந்திரம் அல்ல, நீங்கள் எந்த ஹோட்டலில் தங்க வேண்டும் என்பதை முடிவு செய்வது உங்கள் சுதந்திரம் அல்ல—இவை எதுவும் பணியிடத்தில் சுதந்திரத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதில்லை. எந்தவொரு நல்ல நிறுவனத்திற்கும் இப்படிப்பட்ட எல்லா பகுதிகளுக்கும் வரம்புகள் மற்றும் வழிகாட்டுதல்கள் தேவைப்படும்,

இல்லையெனில், நிர்வாகத்தில் குழப்பம் உண்டாகிவிடும். பணியிடத்தில் உண்மையான சுதந்திரம் பெற்றிருப்பது என்பது தேவையற்ற கட்டுப்பாடுகளோ அல்லது இடைஞ்சல்களோ இல்லாமல் உங்கள் நிறுவனத்திற்கு அதிக மதிப்பை உருவாக்க உங்கள் எல்லா திறமைகளையும் பயன்படுத்த போதுமான உரிமையைக் கொண்டிருப்பதாகும். அதாவது, ஆக்கப்பூர்வமான யோசனைகளைப் பகிர்ந்துகொள்வதற்கும், இலக்குகளை நிர்ணயிப்பதற்கும், அந்த இலக்குகளை அடைவதற்கான வழிகளைத் தீர்மானிப்பதற்கும் உரிமையைப் பெற்றிருப்பதே சுதந்திரமாகும்.

**எபேசியர் 6:6**
**மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ்செய்யாமல், கிறிஸ்துவின் ஊழியக்காரராக, மனப்பூர்வமாய்த் தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள்.**

## ஒழுக்க நெறி சார்பியல் மற்றும் சூழ்நிலை நெறிமுறைகள்

ஒழுக்க நெறி சார்பியல் மற்றும் சூழ்நிலை நெறிமுறைகளில் நம்பிக்கை கொண்ட பிந்தைய-நவீன உலகக் கண்ணோட்டத்தால் வணிக வளாகத்திலும் தனி நபரின் வாழ்விலும் நற்பண்புகள் பணியிடத்தில் சவாலாக இருக்கின்றன. சரி மற்றும் தவறு என்ற கருத்தும், கருப்பு மற்றும் வெள்ளை என்ற கருத்தும் சாம்பல் நிற நிழல்களாக உருமாறிவிட்டன. நற்பண்புகள், ஒழுக்க நெறிமுறைகள் மற்றும் உத்தமம் ஆகியவை லாபம், சரியான இணைப்புகள் மற்றும் விரைவான வெற்றிகளுக்காக சமரசம் செய்யப்படுகின்றன.

இன்னும் பூர்வ எல்லைக்குறிகள் இவ்வாறு சொல்லப்பட்டிருக்கின்றன,

**நீதிமொழிகள்** 10:9
**உத்தமமாய் நடக்கிறவன் பத்திரமாய் நடக்கிறான்; கோணலான வழிகளில் நடக்கிறவனோ கண்டுபிடிக்கப்படுவான்.**

தொழில் வல்லுநர்களே, உலகத்தினால் நாம் பாதிக்கப்படக்கூடாது, நாம்தான் நம் உலகில் தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும். நான் உங்களுக்கு ஒரு சவால் விட விரும்புகிறேன். உலகில் ஒரு வித்தியாசத்தை உண்டாக்குங்கள்; வெறும் வாழ்வாதாரத்தை மட்டும் உருவாக்காதீர்கள்!

## திருச்சபை வாழ்க்கைக்கான பூர்வ எல்லைக்குறிகள்

### *இசை*

சமகால இசையைப் பயன்படுத்துவது தவறில்லை. புதிய தலைமுறையினரும் நம்முடன் இணைந்து இசையுடன் தெய்வீகப் பாடல்களை பாடி ஆராதிக்கும்படி சமகால இசையை பயன்படுத்துவது நல்லதுதான். ஆனாலும், தேவனை உணர்வதைவிட அதிகமாக இசையை உயர்த்தும் பாடல்களைக் குறித்து நாம் கவனமாக இருக்க வேண்டும்.

**உபாகமம்** 31:19
**இப்பொழுது நீங்கள் இந்தப் பாட்டை எழுதிக்கொண்டு, இதை இஸ்ரவேல் புத்திரருக்குப் படிப்பித்து, இந்தப் பாட்டு எனக்குச் சாட்சியாக இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே இருக்கும்படி இதை அவர்கள் வாயில் வழங்கப்பண்ணுங்கள்.**

பாடல்கள் எழுதப்பட வேண்டும் என்று தேவன் விரும்பியதற்கான காரணங்களில் ஒன்று, தம்முடைய ஜனங்களுக்குக் கற்பிக்கும்படியாகவும், தம்மையும் தாம் செய்த செயல்களையும் அவர்கள் தொடர்ந்து நினைவுகூரும்படியாகவும் அவருடைய வார்த்தையை அவர்கள் வாயில் வைக்க வேண்டும் என்பதேயாகும். இந்தப் பூர்வ எல்லைக்குறிகளைக் கொண்டு சமகாலப் பாடல்களை நாம் மதிப்பீடு செய்ய வேண்டும். தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்ற ஒரு பாடல் உதவுமா?

அதோடு கூட, மகத்தான பழைய விசுவாச பாடல்களை நாம் புறக்கணிக்க வேண்டாம். இவை நம்பிக்கையை வெளிப்படுத்தும் இறையியல் நிறைந்த பாடல்களாய் இருக்கின்றன.

**எபேசியர்** 5:19
**சங்கீதங்களினாலும் கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம்பண்ணி,**

கர்த்தருக்காக நாம் பாடும் மெல்லிசையின் வெளிப்பாடுகளாக-சங்கீதங்கள், கீர்த்தனைகள் மற்றும் சுவிசேஷப் பாடல்கள் ஆகிய அனைத்தும் நமக்குத் தேவை!

### *ஒழுக்கம்*

பெரும்பாலான போதகர்கள், இன்று, மேய்ப்பனின் கோலைப் பயன்படுத்த பயப்படுகிறார்கள். ஒவ்வொரு மேய்ப்பனும் தனது

ஆடுகளைப் புல்லுள்ள இடங்களில் மேய்த்து அமர்ந்த தண்ணீர்கள் அண்டையில் அழைத்துச் செல்வது மட்டுமல்லாமல், தனது ஆடுகளை வழிநடத்தவும் பாதுகாக்கவும் அவனுக்கு ஒரு கோலும் தடியும் தேவைப்படுகிறது.

மருத்துவ உலகில், நோய்வாய்ப்பட்டவர்களுக்கு "மரணவலி தணிப்பு சிகிச்சை" என்று அழைக்கப்படும் ஒரு பராமரிப்பு உண்டு. அவர்களின் இறுதி நாட்களை முடிந்தவரை சௌகரியமாக மாற்ற வேண்டும் என்பதே அந்தப் பராமரிப்பின் நோக்கமாகும். உடல் நலக்குறைவால் அவதிப்படுபவர்களுக்கு இது மிகவும் நல்ல சிகிச்சையாகும். இருப்பினும், பாவத்தில் இருப்பவர்களுக்கும், தேவனுடைய கிருபையை இழந்துபோகும் தருவாயில் உள்ளவர்களுக்கும் திருச்சபையால் நோய்த்தடுப்பு சிகிச்சை அளிக்க முடியாது (எபிரேயர் 12:15). இந்த பூமியில் மட்டுமே அவர்கள் சௌகரியத்தை அனுபவிக்க செய்து நித்தியத்தை நரகத்தில் கழிக்க உதவியதில் எந்த பயனும் இல்லை. இதைவிட நாம் கத்தியை எடுத்து, அப்பாவத்திற்கு காரணமான வலது கண்ணையோ அல்லது வலது கையையோ "துண்டிக்கும்" அசௌகரியமான செயல்பாட்டிற்குள் நடத்துவது நலம் என்று எண்ணுகிறேன் (மத்தேயு 5:29,30). திருச்சபையே, உங்கள் போதகர் உண்மையான மேய்ப்பராக இருக்க நீங்கள் உதவுங்கள். அவருடைய கோலையும் தடியையும் பயன்படுத்த அவரை அனுமதியுங்கள், அது இல்லாமல், அவரால் ஆடுகளை வழிநடத்தவோ, திருத்தவோ, பாதுகாக்கவோ முடியாது.

1 **கொரிந்தியர்** 4:21

**உங்களுக்கு என்னவேண்டும்? நான் பிரம்போடு உங்களிடத்தில் வரவேண்டுமோ? அல்லது அன்போடும் சாந்தமுள்ள ஆவியோடும் வரவேண்டுமோ?**

நாம் பூரண கிருபையை நம்புகிறோம், அதேசமயத்தில், தெய்வீக ஒழுக்கத்தையும் கடைப்பிடிக்க வேண்டும் என்று நாம் நம்புகிறோம். கிருபையின் பெயரில் தெய்வீக வாழ்க்கை வாழ்வதை நாம் இழக்க வேண்டாம். நாம் அதிக ஒழுக்கத்தை மட்டுமே கடைப்பிடித்து, தேவனுடைய கிருபை இல்லாமல், நாம் எதுவும் செய்ய முடியாது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது!

## *தலைமைத்துவத்துக்கு தன்னை அர்ப்பணித்தல்*

பிந்தைய நவீனத்துவ உலகில், "மரியாதை அளித்தல்," "கனம்பண்ணுதல்," "அர்ப்பணித்தல்" மற்றும் "கீழ்ப்படிதல்" போன்ற வார்த்தைகள் கெட்ட வார்த்தைகளாகக் கருதப்படுகின்றன! மேலும் இந்த மனப்பான்மை திருச்சபைக்குள் நுழைந்துவிட்டது.

இதைக் குறித்த பூர்வ எல்லைக்குறிகள் இதோ.

எபிரெயர் 13:17

**உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம்பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச் செய்யும்படி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள். அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் பிரயோஜனமாயிருக்கமாட்டாதே.**

## ஊழியத்திற்கான பண்டைய அடையாளங்கள்

### *ஆடை*

பிரசங்க பீடத்தில் நிற்கும்போது, ஆசாரிய அங்கிகளை அணிந்த பிரசங்கியார்கள் என்ற காலம் மாறி, இப்போது பிரசங்கியார்கள் கோட் சூட் உடைகள் அல்லது வழக்கமாக உடுத்தும் சாதாரண உடைகளை அணிகிறார்கள், நாம் கால மாற்றத்தினால் வெகுதூரம் சென்றுவிட்டோம். பிரசங்கியார்களை அவர்களின் உடையை மட்டுமே வைத்து மதிப்பிடாதீர்கள். அவர்கள் ஓநாய்களின் தோலைப் போர்த்தியிருக்கும் ஆடுகளாகக் கூட இருக்கலாம்! முக்கியமானது என்னவென்றால், அவர்களின் வாழ்க்கை, குணநலன், அவர்கள் வழங்கும் செய்தியில் காணப்படும் உத்தம தன்மை மற்றும் அவர்கள் வெளிப்படுத்தும் அபிஷேகம் போன்றவற்றை கவனிப்பதுதான்! ஊழியத்தில் பூர்வ எல்லைக்குறிகளை நாம் பராமரிக்கும்வரை வழக்கமாய் உடுத்தும் சாதாரண ஆடைகளை அணிவது தவறல்ல!

### *நடத்தை*

இன்று கிறிஸ்தவ சமுதாயத்தின் சில பகுதிகளில் நான் பார்க்கிற காரியங்கள் எனக்கு மிகவும் கவலையளிப்பதாக உள்ளன. அமைதியாகவும் சாதாரணமாகவும் இருக்க வேண்டும் என்பதற்காக, பிரசங்கியார்களும் ஊழியர்களும் உண்மையிலேயே ஊழியத்தில் ஒழுக்க நெறிமுறைக்கான தரங்களைக் குறைத்து மதிப்பிடுகிறார்கள். ஒரு பிரசங்கியார் பிரசங்க மேடையில் நின்றுகொண்டு ஒவ்வொரு வாரமும் தன் மனைவியுடன் எத்தனை முறை உடலுறவு கொள்கிறார் என்று பேசுவதை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா! இனிமையானவர்களாக இருக்க வேண்டும் என்பதற்காக, உளறுதல், கீழ்த்தரமான நகைச்சுவைகள் மற்றும் பல தரமற்ற விஷயங்களால் பிரசங்கத்தின் புனிதத்தன்மையை நாம் இழந்துவிட்டோம்.

தனது ஊழியத்தைத் தொடங்கிய காலத்திலிருந்து, நான்கு முறை விவாகரத்து பெற்று தற்போது தனது ஐந்தாவது திருமண பந்தத்தில் இருக்கும் ஒருவர், தொலைக்காட்சி ஊழியத்தில் போதகராகவும் பிரசங்கியாராகவும் தொடர்கிறார். இதை ஏன் நாம் பொறுத்துக்கொள்கிறோம்?

ஊழியத்திலும் ஆவிக்குரிய தலைமைத்துவத்திலும் இருப்பவர்களுக்கு இதுவே பண்டைய அடையாளமாகும்.

1 **தீமோத்தேயு** 3:1-5

[1] **கண்காணிப்பை விரும்புகிறவன் நல்லவேலையை விரும்புகிறான், இது உண்மையான வார்த்தை.**

[2] **ஆகையால் கண்காணியானவன் குற்றஞ்சாட்டப்படாதவனும், ஒரே மனைவியை உடைய புருஷனும், ஜாக்கிரதையுள்ளவனும், தெளிந்த புத்தியுள்ளவனும், யோக்கியமுள்ளவனும், அந்நியரை உபசரிக்கிறவனும், போதகசமர்த்தனுமாய் இருக்கவேண்டும்.**

[3] **அவன் மதுபானப்பிரியனும், அடிக்கிறவனும், இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவனுமாயிராமல், பொறுமையுள்ளவனும், சண்டைபண்ணாதவனும், பணஆசையில்லாதவனுமாயிருந்து,**

[4] **தன் சொந்தக் குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனும், தன் பிள்ளைகளைச் சகல நல்லொழுக்கமுள்ளவர்களாகக் கீழ்ப்படியப்பண்ணுகிறவனுமாயிருக்கவேண்டும்.**

[5] **ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்?**

கிறிஸ்தவமண்டலத்தில், ஊழியத்தில் இருப்பவர்களுக்கு தேவனால் கொடுக்கப்பட்ட முன்நிபந்தனைகளான இந்தத் தரநிலைகளை நாம் அலட்சியப்படுத்திவிட்டோம் என்பது போலத் தோன்றுகிறது. ஊழியக்காரர்கள் வெறுமனே மனுஷர்கள் என்பது உண்மைதான், ஆனாலும், தேவன் நம்மிடமிருந்து எதிர்பார்க்கும் சில தராதரங்களை அவர் ஏற்படுத்தியிருக்கிறார். இவை நாம் மீறக் கூடாத பூர்வ எல்லைக்குறிகளாய் இருக்கின்றன!

## *செய்தி*

அப்போஸ்தலனாகிய பவுலிடமிருந்து ஒரு கடுமையான எச்சரிக்கை.

*"அநேகரைப்போல, நாங்கள் தேவவசனத்தைக் கலப்பாய்ப் பேசாமல், துப்புரவாகவும், தேவனால் அருளப்பட்டபிரகாரமாகவும், கிறிஸ்துவுக்குள் தேவசந்நிதியில் பேசுகிறோம்"* (2 கொரிந்தியர் 2:17) என்று பவுல் சொன்னான்.

தேவனுடைய வார்த்தையைக் கலப்பாய் பேசுதல் என்றால் என்ன? இதன் பொருள், வார்த்தைகளைச் சேர்த்து கலந்துவிடுவது, ஒழுக்க நெறிமுறைக்கான சார்பியல்வாதத்துடன் (தனித்துவம் அல்ல) தொடர்புபடுத்துவது, பிந்தைய-நவீன தத்துவம், மனிதநேயம் மற்றும் "நன்றாக உணரச் செய்தல்" போன்ற கருத்துக்களைக் கலப்படம் செய்வது போன்றவையாகும், இவை நம் வார்த்தைகளைக் கேட்போர்களின் செவிக்கு விருந்தாக இருக்கிறது! மேலும் உலகம் முழுவதும் உள்ள பிரசங்க மேடைகளில் இப்படித்தான் நடக்கிறது. சில பிரசங்கியார்கள் வேதாகமத்தைப் பயன்படுத்துவதும், வேதத்தை மேற்கோள் காட்டுவதுமில்லை என்றல்ல. மாறாக, புதிய உலகத்திற்குப் பொருத்தமானதாக இருப்பவைகளைச் சொல்ல முயற்சித்து, தங்களது பிரசங்கங்களை கேட்கும் ஜனங்களுக்கு, அவர்களைப் பிரியப்படுத்தும் வகையில் வசனத்தைக் கலப்பாய் பேசுகிறார்கள்!

2 **தீமோத்தேயு** 4:2-4

2 **சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு. எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி, கடிந்துகொண்டு, புத்திசொல்லு.**

3 **ஏனென்றால், அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக்கொண்டு,**

4 **சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்துபோகுங்காலம் வரும்.**

ஒரு பிரசங்கத்தை ஆதரிப்பவர்களின் எண்ணிக்கையை வைத்து அதன் மதிப்பைக் கணக்கிட முடியாது. எந்த ஒரு நல்ல பேச்சாளராலும் தனக்கென்று ஒரு கூட்டத்தை ஈர்க்க முடியும். ஈடு இணையற்ற தேவனுடைய வார்த்தையின் வெளிச்சத்தில் அதை மதிப்பிடுவதே ஒரு பிரசங்கத்தை மதிப்பிடுவதற்கான ஒரே வழியாகும்.

இயேசு ராஜ்யத்தின் செய்தியை நயவசன பேச்சுகளால் கலப்பாய் பேசவில்லை. அவருடைய பலிபீடத்தின் அழைப்பு, *"... தன் சிலுவையை அநுதினமும் எடுத்துக் கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்"* (லூக்கா 9:23) என்பதாகவே இருந்தது.

**யோவான்** 6:66,67

66 **அதுமுதல் அவருடைய சீஷரில் அநேகர் அவருடனேகூட நடவாமல் பின் வாங்கிப்போனார்கள்.**

**[67] அப்பொழுது இயேசு பன்னிருவரையும் நோக்கி: நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களோ என்றார்.**

இயேசுவின் சீஷர்கள் அநேகர் அவரை விட்டு விலகிச்சென்று விட்டனர், 12 சீஷர்கள் மட்டுமே எஞ்சியிருந்தனர், அவர்களும் போய்விட மனதாய் இருக்கிறார்களோ என்று இயேசு அவர்களைப் பார்த்துக் கேட்டார்.

இயேசு தாம் பிரசங்கித்த செய்தியினால் ஒருவேளை தோல்வியடைந்திருக்கலாம் என்று நீங்கள் நினைத்திருப்பீர்கள், ஏனென்றால் அவர் பிரசங்கித்த பிறகு அவரை பின்பற்றியவர்கள் அவரை விட்டு விலகிச் சென்றனர். (ஜனங்களின் எதிர்மறையான கருத்துக்களால் ஒரு பிரசங்கத்தை நீங்கள் மதிப்பிட முடியாது– அவர்கள் சத்தியத்தை கேட்க விரும்பவில்லை என்றால் வேறென்ன செய்வது?) ஆனாலும், அவருடைய வார்த்தை பிதாவின் தூய வார்த்தையாக இருந்ததாலும், பிதாவின் கிரியைகளைச் செய்ததாலும் ஜனக்கூட்டம் அவரைப் பின்தொடர்ந்தது என்பதை நாம் அறிவோம்.!

நமது பிரசங்கத்தில், சமரசமற்ற, கலப்படமில்லாத தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கிக்கும் பூர்வ குறியீடுகளை நாம் கடைப்பிடிக்க வேண்டும்!

## *வழிமுறைகள்*

பரிசுத்த ஆவியானவரின் வல்லமையில் அடையாளங்கள், அற்புதங்கள் மற்றும் அதிசயங்களால் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதே ஊழியத்தின் முறைக்கான பூர்வ எல்லைக்குறியாகும். இதைத்தான் இயேசு செய்தார், மற்றும் இதைத்தான் நாம் செய்ய வேண்டும் என்று அவர் நமக்குப் போதித்தார். சுவிசேஷத்தின் நான்கு பதிவுகளிலும் இயேசு பேசிய உவமைகளை விட அவர் செய்த அற்புதங்களே அதிகமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

உண்மையிலேயே இயேசு சொன்னார்:

**யோவான் 10:37,38**

**[37] என் பிதாவின் கிரியைகளை நான் செய்யாதிருந்தால், நீங்கள் என்னை விசுவாசிக்கவேண்டியதில்லை.**

**[38] செய்தேனேயானால், நீங்கள் என்னை விசுவாசியாதிருந்தாலும், பிதா என்னிலும் நான் அவரிலும் இருக்கிறதை நீங்கள் அறிந்து விசுவாசிக்கும்படி அந்தக் கிரியைகளை விசுவாசியுங்கள் என்றார்.**

அப்போஸ்தலனாகிய பவுல் சொன்னான்:

**1 கொரிந்தியர் 2:4,5**

**[4] உங்கள் விசுவாசம் மனுஷருடைய ஞானத்திலல்ல, தேவனுடைய பெலத்தில் நிற்கும்படிக்கு,**

**[5] என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்பட்டதாயிருந்தது.**

இது நமது பூர்வ எல்லைக்குறியாகும், இதைத்தான் நாம் வாழும் காலத்தின் பிரசங்கத்தை அளவிடுவதற்கு நாம் பயன்படுத்த வேண்டும். திறமையான சொற்பொழிவு மற்றும் பிரமாண்டமான மல்டிமீடியா விளக்கக்காட்சிகள் போன்றவற்றை வைத்து தேவனுடைய வார்த்தைக்கு ஊழியம் செய்வது என்பது இவ்வளவுதான் என்று நினைத்து உங்களை நீங்களே ஏமாற்றிக்கொள்ளாதீர்கள். இயேசுவே நம் தரத்திற்கான ஆதாரம்! வார்த்தையைப் பிரசங்கிக்கும்போது, அது அற்புதங்கள் மற்றும் இயற்கைக்கு அப்பாற்பட்ட அடையாளங்களுடன் இருக்க வேண்டும் என்று அவர் கூறினார். ஜனங்கள் திருச்சபைக்கு வரும்போது, இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையை அனுபவிக்கும்படி, நாம் அவர்களுக்கு வழங்கக்கூடிய சிறந்த "மாற்றத்தின் அனுபவம்" இதுதான்!

ஒரு திருச்சபையினராக நாம் செல்ல வேண்டிய திசை இதுதான். இங்குதான் நாம் செல்ல வேண்டும்!

காலத்தால் அழியாத சத்தியங்களை அறிவிப்பதற்கான தொழில்நுட்பத்தையும் ஆக்கப்பூர்வமான வழிகளையும் பயன்படுத்துவது தவறில்லை என்றாலும், ஏதோ ஒரு வழியில், தேவனிடத்தில் ஆழமாக வேரூன்றியவர்களாக இல்லாமல், ராஜ்யத்தின் மீதான கவனத்தை இழந்து, அதற்குப் பதிலாக, கூட்டத்தை ஈர்த்து நம் வசம் வைப்பதற்காக, அற்பமான வியாபாரத்தை நோக்கிச் சென்று ஒரு விற்பனையாளராக மாறுகிறோமோ என்பதே எனது கவலையாக இருக்கிறது. நமது விசுவாசத்தைத் துவக்குபவரும் முடிப்பவருமாய் இருக்கிறவர் மீது நமது முழு கவனத்தையும் செலுத்துவதற்குப் பதிலாக, நாம் சுயத்தை மையமாகக் கொண்டவர்களாய் மாறுகிறோம்.

ஊழியத்தில் நம்முடைய நோக்கங்களிலும் முறைகளிலும் நாம் கண்டிப்பாக நீதியுள்ளவர்களாக இருக்க வேண்டும். *“இந்த ஊழியம் குற்றப்படாதபடிக்கு, நாங்கள் யாதொன்றிலும்*

*இடறல் உண்டாக்காமல், எவ்விதத்தினாலேயும், எங்களைத் தேவஊழியக்காரராக விளங்கப்பண்ணுகிறோம்"* (2 கொரிந்தியர் 6:3,4).

தேவனுடைய ஊழியர்களாகிய நாம் நமது அழைப்புக்கு உண்மையாக இருப்போம்—தேவனுடைய பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் இயற்கைக்கு அப்பாற்பட்ட செய்கைகளினால் வசனத்தைப் பிரசங்கிப்போம். நாம் பயன்படுத்தும் வேறு எந்த செயலும் தேவனுக்கும் ஜனங்களின் இருதயங்களுக்கும் இடையில் ஒரு பாலத்தை உருவாக்க உதவுவதாக மட்டுமே இருக்க வேண்டும், மேலும் பூர்வ எல்லைக்குறிகளை மாற்றக்கூடாது.

ஏபிசி போதகர்கள் மற்றும் ஊழியத் தலைவர்கள் தேவனுடைய முழுமையான, சமரசம் செய்யப்படாத வசனத்தை பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தோடும் இயற்கைக்கு அப்பாற்பட்ட செய்கையோடும் வழங்க அர்ப்பணிக்கப்பட்டவர்களாய் இருக்கிறார்கள். நல்ல இசை, ஆக்கப்பூர்வமான விளக்கக்காட்சிகள், திறமையான தர்க்க சாஸ்திரம், சமகால ஊழிய நுட்பங்கள் அல்லது சமீபத்திய தொழில்நுட்பம் போன்றவை, பரிசுத்த ஆவியானவரின் அடையாளங்கள், அற்புதங்கள், அதிசயங்கள் மற்றும் வரங்களுடன் வெளிப்படும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் வார்த்தையைப் பிரசங்கிக்கும் முறையான தேவனால் நியமிக்கப்பட்ட அணுகுமுறையை ஒருபோதும் மாற்றியமைக்க முடியாது என்று நாங்கள் நம்புகிறோம் (1 கொரிந்தியர் 2:4,5; எபிரேயர் 2:3,4).

எங்கள் கருப்பொருள் இயேசு, எங்கள் பொருளடக்கம் தேவ வார்த்தை, எங்கள் வழிமுறை பரிசுத்த ஆவியானவரின் வல்லமை, எங்கள் தாகம் ஜனங்கள், மற்றும் எங்கள் குறிக்கோள் கிறிஸ்துவைப் போன்று முதிர்ச்சியடைவதாகும்.

6

# அர்ப்பணிப்புக்கான அழைப்பு

- பூர்வ எல்லைக்குறிகளைக் கடைப்பிடித்து வாழ உங்களை அர்ப்பணியுங்கள்.

- உங்கள் அஸ்திவாரங்கள் தேவனிலும் அவருடைய வார்த்தையிலும் ஆழமாக வேரூன்றியிருக்கும்படி உங்களை அர்ப்பணியுங்கள். தேவன் காலத்தால் மாறாதவர் மற்றும் அவருடைய வார்த்தைகளும் காலத்தால் அழியாதவை. தேவனுடைய வார்த்தையானது, நீங்கள் எல்லாவற்றையும் சீர்தூக்கிப்பார்த்து, உங்கள் வாழ்க்கையை முதலீடு செய்வதற்கு உண்மையிலேயே அது மதிப்புள்ளதா என்று பார்க்கும் அளவுகோலாக இருக்க வேண்டும்; உண்மையில் ஒரு விஷயம் தெய்வீக தரங்களுக்கு ஏற்ப இருக்கிறதா என்பதை அளந்து பார்க்கும் உங்கள் அளவுகோல்களாக அது இருக்க வேண்டும்; எது சரி மற்றும் எது தவறு என்பதை பகுத்தறிய நீங்கள் பார்க்கும் லென்ஸாக அது இருக்க வேண்டும். பூர்வ எல்லைக்குறிகளை நீங்கள் சமரசம் செய்யும்படி உங்களிடம் வீசும் மாற்றத்தின் காற்றுகளை அனுமதிக்காதீர்கள்.

- நமக்கு புனித எல்லைக்குறிகள் உள்ளன, அவை மீறப்படக்கூடாது என்பதை நினைவில் கொள்ளுங்கள். தொடர்ந்து பின்பற்ற வேண்டிய தெய்வீக பாரம்பரியங்கள் நமக்கு உள்ளன.

- இந்த பூர்வ எல்லைக்குறிகளை "உங்கள்" உலகில் பின்பற்ற உங்களை அர்ப்பணியுங்கள்.

- பயனுள்ள மாற்றத்தின் காற்றுக்கு ஏற்றவாறு உங்களை மாற்றியமைக்கவும். மற்ற எல்லா பகுதிகளிலும், பூர்வ எல்லைக்குறிகளைக் கடைப்பிடித்து வாழுங்கள்!

- பூர்வ எல்லைக்குறிகளைத் துல்லியமாக அடுத்த தலைமுறையினருக்குக் கொண்டு செல்லுங்கள்.

கிறிஸ்தவ வாழ்க்கை என்றால் என்ன என்பதைத் துல்லியமாகப் பிரதிபலிக்கும் வகையில் நீங்கள் வாழவும், பேசவும், நடந்துகொள்ளவும் உங்களை அர்ப்பணிக்குமாறு தற்போதைய தலைமுறையினரைப் பார்த்து நான் கேட்டுக்கொள்கிறேன். நாம் வாழும் வாழ்க்கையே அடுத்த தலைமுறைக்கு நாம் கடத்தும் செய்தியாகும். இந்த தற்கால தலைமுறையினர், பூர்வ எல்லைக்குறிகளில் தொடர்ந்து கட்டி எழுப்பப்படுவதை நாம் உறுதிசெய்ய வேண்டும். ஆதியாகமத்தில் சொல்லப்பட்டிருக்கிற பிரமாணமானது, நம்முடைய சொந்த வகையைப் பின்பற்றிப் பலுகிப்பெருகுகிறோம் என்று கூறுகிறது—நாம் எப்படிப்பட்டவர்களாக இருக்கிறோமோ அப்படிப்பட்டவர்களையே நாம் மீண்டும் உருவாக்குகிறோம்.

அடுத்த தலைமுறையினரிடம் நான் பேசவும், அவர்களின் மனதில் புதைந்திருக்கும் அனைத்து தகவல்களையும் பகுத்தறிந்து, எது சரி எது தவறு என்பதைப் புரிந்துகொள்வது எப்படி என்று அவர்களுக்குக் கற்பிக்கவும் நான் விரும்புகிறேன். அடுத்த தலைமுறையினரிடம் பேசவும், பூர்வ எல்லைக்குறிகளுக்குள் எப்படி இருக்க வேண்டும் என்பதை அவர்களுக்குக் கற்பிக்கவும் விரும்புகிறேன். அடுத்த தலைமுறையினரிடம் பேசி, கலகம் செய்யும் குரல் இல்லாமல் (அப்சலோம் செய்த அதே தவறைச் செய்யாமல்) மற்றும் முதிர்ச்சியற்றவர்களைப்போல பேசாமல் (ரெகொபெயாம் செய்த அதே தவறைச் செய்யாமல்) பொறுப்பை எவ்வாறு சரியாகப் பெற்றுக்கொள்வது என்று அவர்களுக்குக் கற்பிக்க நான் விரும்புகிறேன். ஆனாலும், நாம் அதாவது, இந்த தற்போதைய தலைமுறையினர், பூர்வ எல்லைக்குறிகளுக்குள் வாழ்ந்தால், இளைய தலைமுறையின் எதிர்ச்செயல் நமது வாழ்வின் உதாரணங்களின் மூலம் வடிவமைக்கக்கூடிய ஒன்றாக இருக்கும்!!

தேவனுக்குள் உயர எழும்புங்கள் மற்றும் ஆழமாக வேரூன்றி வளருங்கள், ஆனால் நிலைநாட்டப்பட்டிருக்கிற பூர்வ எல்லைக்குறிகளை மீறாதீர்கள்!

# உன்னை நேசிக்கும் தேவன் யார் என்று உனக்குத் தெரியுமா?

சுமார் 2000 வருஷங்களுக்கு முன்பு, தேவன் மனுஷனாக இந்த உலகத்திற்கு வந்தார். அவருடைய நாமம் இயேசு என்பதாகும். அவர் முற்றிலும் பாவமில்லாத வாழ்க்கையை வாழ்ந்தார். இயேசு மாம்சத்தில் வந்த தேவனாக இருந்ததால், அவர் சொன்னவைகள் மற்றும் செய்தவைகள் அனைத்துமே தேவனை நமக்கு வெளிப்படுத்தின. அவர் பேசின வார்த்தைகள் யாவும் தேவனுடைய வார்த்தைகளாக இருந்தன. அவர் செய்த காரியங்கள் யாவும் தேவனுடைய செயல்களாக இருந்தன. இயேசு இந்தப் பூமியில் அநேக அற்புதங்களைச் செய்தார். அவர் வியாதியஸ்தர்களையும் வேதனையில் இருந்தவர்களையும் குணப்படுத்தினார். அவர் குருடர்களின் கண்களைத் திறந்தார், செவிடனின் செவிகளைத் திறந்தார், முடவர்களை நடக்கச் செய்தார், மற்றும் சகலவிதமான நோய்களையும் வியாதிகளையும் சுகமாக்கினார். அவர் ஒரு சில அப்பத் துண்டுகளை அற்புதமாகப் பெருகச் செய்ததன் மூலமாக பசியோடிருந்தவர்களை போஷித்தார், கடும்புயலை அடக்கினார், மற்றும் இன்னும் அநேக அற்புதங்களையும் கூட செய்தார்.

ஜனங்கள் நலமாகவும், சுகமாகவும், ஆரோக்கியமாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்க வேண்டும் என்று அவர் விரும்புவதால், **அவர் ஒரு நல்ல தேவன் என்பதை இந்தச் செயல்கள் அனைத்தும் நமக்கு வெளிப்படுத்துகின்றன. தேவன் ஜனங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய விரும்புகிறார்.**

அப்படியானால் தேவன் ஏன் மனுஷனாக மாறி நமது உலகத்திற்குள் வரும்படி தீர்மானிக்க வேண்டும்? இயேசு ஏன் வந்தார்?

நாம் எல்லோருமே பாவம் செய்து, நம்மை சிருஷ்டித்த தேவனுக்கு முன்பாக ஏற்றுக்கொள்ளத் தகாத செயல்களைச் செய்துவிட்டோம். பாவத்திற்கான விளைவுகள் நிச்சயம் உண்டு. பாவமானது தேவனுக்கும் நமக்கும் இடையே தாண்டிச் செல்ல முடியாத ஒரு மிகப் பெரிய சுவரைப் போன்றதாக இருக்கிறது. பாவம் நம்மை தேவனிடமிருந்து பிரிக்கிறது. நம்மை

சிருஷ்டித்தவரை அறிந்துகொள்வதிலிருந்தும், ஒரு அர்த்தமுள்ள உறவை அவருடன் ஏற்படுத்திக்கொள்வதிலிருந்தும் அது நம்மைத் தடுக்கிறது. எனவே, நம்மில் பலர் இந்தக் காலியிடத்தை மற்ற விஷயங்களால் நிரப்ப முயற்சிக்கிறோம்.

நம்முடைய பாவங்களின் மற்றொரு விளைவு, தேவனிடமிருந்து விலகிச் செல்லும் நித்திய பிரிவினையாகும். தேவனுடைய நியாயஸ்தலத்தில், பாவத்திற்கான தண்டனை மரணமாகும். மரணம் என்பது தேவனிடமிருந்து பிரிந்து நரகத்தில் வாழும் நித்திய பிரிவினையாகும்.

ஆனால் நற்செய்தி என்னவென்றால், நம்மால் பாவத்திலிருந்து விடுபட்டு தேவனிடத்திற்குத் திரும்பிவர முடியும் என்பதேயாகும். வேதாகமம் கூறுகிறது, ***"பாவத்தின் சம்பளம்(கூலி) மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்"*** **(ரோமர் 6:23).** இயேசு சிலுவையில் மரித்தபோது, முழு உலகத்தின் பாவங்களுக்கான விலைக்கிரயத்தையும் செலுத்தினார். மூன்று நாட்களுக்குப் பிறகு, அவர் மறுபடியும் உயிரோடு எழும்பி, பலருக்குத் தம்மை உயிரோடு இருக்கிறவராகக் காட்டினார், பின்பு, மறுபடியும் பரலோகத்திற்குத் திரும்பிச் சென்றார்.

தேவன் அன்பும் இரக்கமும் கொண்ட தேவனாக இருக்கிறார். ஒரு நபர் கூட நரகத்தில் அழிந்துபோவதை அவர் விரும்புவதில்லை. ஆகவேதான், பாவத்திலிருந்தும் அதன் நிரந்தர விளைவுகளிலிருந்தும் விடுபடுவதற்கான ஒரு வழியை முழு மனித இனத்திற்கும் அருளுவதற்காக அவர் இறங்கி வந்தார். அவர் பாவிகளை இரட்சிக்க வந்தார்-உங்களைப் போன்றவர்களையும் என்னைப் போன்றவர்களையும் பாவத்திலிருந்தும் நித்திய மரணத்திலிருந்தும் மீட்கவே வந்தார்.

இலவசமாகக் கிடைக்கும் இந்த பாவ மன்னிப்பைப் பெற்றுக்கொள்ள, நாம் ஒரே ஒரு காரியத்தைச் செய்ய வேண்டும் என்று வேதாகமம் நமக்குச் சொல்கிறது - அது என்னவென்றால், கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் செய்து முடித்ததை ஏற்றுக்கொண்டு, அவரை முழு இருதயத்தோடு விசுவாசிக்க வேண்டும் என்பதேயாகும்.

***“... அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் அவருடைய நாமத்தினாலே பாவமன்னிப்பைப் பெறுவான்”*** **(அப்போஸ்தலர் 10:43).**

***"கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய்"*** **(ரோமர் 10:9).**

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசித்தால், நீங்களும் கூட பாவமன்னிப்பைப் பெற்று சுத்திகரிக்கப்படலாம்.

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவையும், அவர் உங்களுக்காக சிலுவையில் என்ன செய்திருக்கிறார் என்பதையும் விசுவாசிப்பதற்கு உங்களுக்கு உதவும் ஒரு எளிய ஜெபம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இயேசு உங்களுக்காகச் செய்ததை நீங்கள் ஏற்றுக்கொண்டீர்கள் என்பதை வெளிப்படுத்தவும், உங்கள் பாவங்களுக்கான பாவமன்னிப்பைப் பெற்றுக்கொண்டு சுத்திகரிக்கப்படவும் இந்த ஜெபம் உங்களுக்கு உதவும். இந்த ஜெபம் உங்களுக்கான ஒரு வழிகாட்டி மட்டுமே. நீங்கள் உங்கள் சொந்த வார்த்தைகளைப் பயன்படுத்தியும் கூட ஜெபிக்கலாம்.

*அன்புள்ள கர்த்தராகிய இயேசுவே, சிலுவையில் நீர் எனக்காக என்ன செய்திருக்கிறீர் என்பதை இன்று நான் புரிந்துகொண்டேன். நீர் எனக்காக மரித்தீர், உம்முடைய விலையேறப்பெற்ற இரத்தத்தை சிந்தினீர், நான் மன்னிக்கப்படும்படி என் பாவங்களுக்கான தண்டனையை நீர் ஏற்றுக்கொண்டீர். உம்மை விசுவாசிக்கிறவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்கிறார்கள் என்று வேதாகமம் சொல்கிறது.*

*இன்று, நான் உம்மை விசுவாசிக்கவும், எனக்காக சிலுவையில் மரித்து, மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததன் மூலம் நீர் எனக்காகச் செய்ததை ஏற்றுக்கொள்ளவும் நான் தீர்மானிக்கிறேன். எனது சொந்த நற்கிரியைகளால் நான் என்னை இரட்சித்துக்கொள்ள முடியாது என்பதை அறிவேன், வேறு எந்த மனுஷனும் என்னை இரட்சிக்க முடியாது என்பதும் எனக்குத் தெரியும். என் பாவங்களுக்கான மன்னிப்பை என்னால் சம்பாதிக்க முடியாது.*

*இன்று, நீர் எனக்காக மரித்தீர், என் பாவங்களுக்கான விலைக்கிரயத்தை செலுத்தினீர், மரித்தோரிலிருந்து மறுபடியும்*

*உயிர்த்தெழுந்தீர் என்றும், உம் மீது வைத்திருக்கிற விசுவாசத்தால், என் பாவங்களுக்கான மன்னிப்பையும் சுத்திகரிப்பையும் நான் பெற்றுக்கொள்கிறேன் என்றும் நான் என் உள்ளத்தில் விசுவாசித்து என் வாயினால் அறிக்கையிடுகிறேன்.*

*இயேசுவே உமக்கு நன்றி. உம்மை நேசிக்கவும், உம்மை அதிகமாக அறிந்துகொள்ளவும், உமக்கு உண்மையாக இருக்கவும் எனக்கு உதவி செய்வீராக. ஆமென்.*

# ஆல் பீப்பிள் சர்ச் பற்றி அறிவோம்

ஆல் பீப்பிள் சர்ச்சானது பெங்களூர் நகரத்துக்கு உப்பாகவும் வெளிச்சமாகவும் இருக்க வேண்டும் என்பதும், இந்த தேசத்துக்கும் இன்னும் நிறைய தேசங்களுக்கும் தேவ சத்தமாக இருக்க வேண்டும் என்பதும்தான் எங்களது தரிசனம்.

ஆல் பீப்பிள் சர்ச்சானது **இயேசுவை நேசிக்கும், வார்த்தையில் கவனம் செலுத்தும், ஆவியால் நிரப்பப்பட்டிருக்கும்** ஒரு திருச்சபையும், ஒரு குடும்ப திருச்சபையும், மேம்படுத்தும் மையமும், ஊழியத்தை அடிப்படையாகக் கொண்டதும் மற்றும் உலகளாவிய ஊழியத்தை செய்யும் ஒரு திருச்சபையுமாகும்.

- ஒரு **குடும்பத் திருச்சபையாக,** கிறிஸ்துவை மையமாகக் கொண்ட ஐக்கியத்தில் ஒரு சமூகமாக ஒன்றாக வளர்கிறோம், தேவனுடைய சபையாக ஒருவருக்கொருவர் அன்பாக இருந்து அக்கறையோடு ஊழியம் செய்கிறோம்.
- **மேம்படுத்தும் ஒரு மையமாக,** ஒவ்வொரு விசுவாசியும் வெற்றியுடன் வாழவும், கிறிஸ்துவின் சாயலில் முதிர்ச்சியடையவும், அவர்களின் வாழ்க்கைக்கான தேவனுடைய நோக்கங்களை நிறைவேற்றவும் நாங்கள் ஊக்கமளித்து, அவர்களை மேம்படுத்துகிறோம்.
- **ஊழியத்தை அடிப்படையாகக் கொண்டவர்களாக,** தேவனுடைய வார்த்தையினாலும் பரிசுத்த ஆவியானவரின் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையுள்ள செயல்களினாலும், இயேசு கிறிஸ்துவின் முழு சுவிசேஷத்தினால் நமது நகரம், தேசம் மற்றும் பிற தேசங்களை ஆசீர்வதிக்க அர்த்தமுள்ள ஊழியத்தில் ஈடுபடுகிறோம்.
- **ஒரு உலகளாவிய ஊழியமாக,** தேவனுடைய ராஜ்யத்திற்காகத் தங்கள் பிராந்தியங்களில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய தெய்வீகத் தலைவர்கள் மற்றும் ஆவியானவரால் வழிநடத்தப்படும் திருச்சபைகளை வளர்ப்பதன் மூலம் உள்நாட்டிலும் உலக அளவிலும் நாங்கள் ஊழியம் செய்கிறோம்.

ஆல் பீப்பிள் சர்ச்சில், பரிசுத்த ஆவியின் அபிஷேகம் மற்றும் நடத்துதலில் தேவனுடைய வார்த்தையை முழுமையாகவும், சமரசம் செய்யாமலும் முன்வைக்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம். நல்ல

இசை, ஆக்கப்பூர்வமான விளக்கக்காட்சிகள், கைதேர்ந்த வேத தர்க்கவியலாலர்கள், இன்றைய காலத்துக்கு ஏற்ற ஊழிய முறைகள், நவீன தொழில்நுட்பம் போன்றவைகள், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையில் தேவனுடைய வார்த்தையை பிரசங்கிக்கும் முறைக்கும் பரிசுத்த ஆவியானவரின் அடையாளங்கள், அதிசயங்கள், அற்புதங்கள் மற்றும் வரங்களுக்கும் ஒருபோதும் ஈடாகாது என்று நாங்கள் நம்புகிறோம் (1 கொரிந்தியர் 2:4,5; எபிரேயர் 2:3,4). எங்கள் கருப்பொருள் இயேசு, எங்கள் உள்ளடக்கம் வார்த்தை, எங்கள் முறை பரிசுத்த ஆவியானவரின் வல்லமை, எங்கள் தாகம் மக்கள் மற்றும் எங்கள் குறிக்கோள் கிறிஸ்துவைப் போல முதிர்ச்சியடைதலாகும்.

பெங்களூரை மையமாகக் கொண்டு செயல்படும் எங்களது ஆல் பீப்பிள் சர்ச்சானது, இந்தியாவில் பல இடங்களில் திருச்சபையைக் கொண்டுள்ளது. ஆல் பீப்பிள் சர்ச் இருப்பிடங்களின் தற்போதைய பட்டியலையும் தொடர்புக்கான தகவலையும் பெற, apcwo.org/locations ல் உள்ள எங்கள் வலைத்தளத்தைப் பார்வையிடவும் அல்லது contact@apcwo.org க்கு மின்னஞ்சல் அனுப்பவும்.

## இலவச வெளியீடுகள்

A Church in Revival
A Real Place Called Heaven
A Time for Every Purpose
Ancient Landmarks
Baptism in the Holy Spirit
Being Spiritually Minded and Earthly Wise
Biblical Attitude Towards Work
Breaking Personal and Generational Bondages
Change
Code of Honor
Divine Favor
Divine Order in the Citywide Church
Don't Compromise Your Calling
Don't Lose Hope
Equipping the Saints
Foundations (Track 1)
Fulfilling God's Purpose for Your Life
Gifts of the Holy Spirit
Giving Birth to the Purposes of God
God Is a Good God
God's Word—The Miracle Seed
How to Help Your Pastor
Integrity
Kingdom Builders
Laying the Axe to the Root
Living Life Without Strife
Marriage and Family
Ministering Healing and Deliverance
Offenses–Don't Take Them
Open Heavens
Our Redemption
Receiving God's Guidance
Revivals, Visitations and Moves of God
Shhh! No Gossip!
Speak Your Faith
The Conquest of the Mind
The Father's Love
The House of God
The Kingdom of God
The Mighty Name of Jesus
The Night Seasons of Life
The Power of Commitment
The Presence of God
The Redemptive Heart of God
The Refiner's Fire
The Spirit of Wisdom, Revelation and Power
The Wonderful Benefits of Speaking in Tongues
Timeless Principles for the Workplace
Understanding the Prophetic
Water Baptism
We Are Different
Who We Are in Christ
Women in the Workplace
Work Its Original Design

புதிய புத்தகங்கள் தொடர்ந்து வெளியிடப்படுகின்றன. PDF, ஆடியோ மற்றும் பிற வடிவங்களில் இலவசமாக ஆல் பீப்பிள் சர்ச்சின் கிறிஸ்தவ புத்தகங்களைப் பதிவிறக்கம் செய்ய apcwo.org/books என்ற வலைதளத்தைப் பார்வையிடவும். இவற்றில் பல புத்தகங்கள் பிற மொழிகளிலும் கிடைக்கின்றன. இலவச ஆடியோ மற்றும் வீடியோ பிரசங்கங்கள், பிரசங்க குறிப்புகள் மற்றும் பல இலவச ஆதாரங்களுக்கு apcwo.org/sermons என்ற வலைதளத்தைப் பார்வையிடவும்.

# கிறிசாலிஸ் கவுன்சிலிங்

வாழ்க்கையின் சவால்களை எதிர்கொள்ளவும், அவற்றைக் கடக்கவும் மக்களுக்கு உதவ, கிறிசாலிஸ் கவுன்சிலிங்கானது தனிப்பட்ட ஆலோசனைகளை வழங்குகிறது. கிறிசாலிஸ் கவுன்சிலிங் என்பது தொழில் ரீதியாக பயிற்சி பெற்ற மற்றும் அனுபவம் வாய்ந்த கிறிஸ்தவ ஆலோசகர்களின் குழுவாகும்.

எங்கள் சேவைகள் எல்லா வயதினருக்குமானவை மற்றும் இது வாழ்க்கையின் பல்வேறு சவால்களைத் தீர்த்துவைக்கின்றன.

| | |
|---|---|
| **இளம் பிராய நடத்தை** | **நடத்தையில் சீர்கேடு** |
| **பிறரோடு இணைக்கக் குறைபாடு** | **ஆளுமை குறைபாடு** |
| **உறவுமுறை சவால்கள்** | **உளவியல் / உணர்வு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள்** |
| **கல்வியில் பின்தங்கிய நிலை** | **மன அழுத்தம் / திடீர் அதிர்ச்சி** |
| **தொழில் தொடர்பான பிரச்சினைகள்** | **மது / போதைப்பொருளுக்கு அடிமை** |
| **குடும்பம் / தம்பதிகள்: திருமணத்திற்கு முன், திருமணத்திற்கு பின்** | **ஆவிக்குரிய போராட்டங்கள்** |
| **பெற்றோர் / குழந்தைகள் / உடன்பிறந்தவர்கள் / சக வயதினர்** | **வாழ்வியல் முன்னேற்ற ஆலோசனை** |

கிரிசலிஸ் கவுன்சிலிங் சேவைகளுக்கான கட்டணங்கள் குறைவானதாகவும் சுலபமாக செலுத்தக்கூடியதாகவும் இருக்கிறது.

எங்களிடம் உள்ள கைதேர்ந்த ஆலோசகர்களில் ஒருவருடன் சந்திப்பைத் திட்டமிட கீழ்க்கண்ட வழிமுறைகளில் அணுகவும்:

**Website: chrysalislife.org**

**Phone:** +91-80-25452617 அல்லது கட்டணமில்லா அழைப்பு (இந்தியாவிற்குள்) 1-800-300-00998

**Email: counselor@chrysalislife.org**

கிறிசலிஸ் கவுன்சிலிங் என்பது ஆல் பீப்பிள் சர்ச் & வேர்ல்டு அவுட்ரீச் செய்யும் ஊழியமாகும்.

# ஆல் பீப்பிள் சர்ச்சில் பங்குதாரராக இருத்தல்

ஆல் பீப்பிள் சர்ச்சின் ஊழியர்கள், ஒரு உள்ளூர் திருச்சபையாக தன் சொந்த எல்லைகளுக்கு அப்பால், இந்தியா முழுவதும், குறிப்பாக வட இந்தியா முழுவதும் ஊழியம் செய்வது மட்டுமல்லாமல், (அ) தலைவர்களைப் பெலப்படுத்துதல், (ஆ) இளைஞர்களை ஊழியத்திற்கு ஆயத்தப்படுத்துதல் மற்றும் (இ) கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டியெழுப்புதல் ஆகியவற்றில் சிறப்பு கவனம் செலுத்துகின்றனர். இளைஞர்களுக்கான பல பயிற்சிக்கூடங்கள் மற்றும் 'கிறிஸ்தவ தலைவர்களுக்கான கருத்தரங்குகள்' ஆண்டு முழுவதும் நடத்தப்படுகின்றன. மேலும், வார்த்தையிலும் ஆவியிலும் விசுவாசிகளை ஆயத்தப்படுத்தும் நோக்கத்துடன் ஆங்கிலத்திலும் பிற இந்திய மொழிகளிலும் புத்தக வெளியீடுகளின் பல ஆயிரக்கணக்கான பிரதிகள் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றன.

ஒரு முறை தரும் நிதியாகவோ அல்லது மாதாந்திர நிதியாகவோ அனுப்புவதன் மூலம் எங்களுடன் நிதி ரீதியாக பங்குதாரராக இருக்க உங்களை அழைக்கிறோம். நமது நாடு முழுவதும் செய்யப்படும் இந்த ஊழியத்திற்காக எங்களுக்கு உதவ நீங்கள் அனுப்பும் எந்தத் தொகையும் பெரிதும் பாராட்டப்படும்.

நீங்கள் அனுப்ப வேண்டிய பரிசுத் தொகையை "ஆல் பீப்பிள் சர்ச்"க்கு காசோலை/ வங்கி வரையோலை மூலம் எங்கள் அலுவலக முகவரிக்கு அனுப்பலாம். இல்லையெனில், எங்களின் வங்கிக் கணக்கு விவரங்களைப் பயன்படுத்தி வங்கிப் பரிவர்த்தனை மூலம் உங்கள் பங்களிப்பை நேரடியாக அனுப்பலாம்.

**வங்கிக் கணக்கின் பெயர்:** All Peoples Church
**வங்கிக் கணக்கு எண்:** 50200068829058
IFSC **குறியீடு:** HDFC0004367
**வங்கியின் பெயர்:** HDFC Bank, 7M/308 80 Feet Road, HRBR Layout, Kalyan Nagar, Bengaluru, 560043, Karnataka, India

***கவனத்தில் கொள்ளவும்:*** *ஆல் பீப்பிள் சர்ச் இந்தியா சார்ந்த வங்கிக் கணக்கிலிருந்து மட்டுமே வங்கி பங்களிப்புகளை ஏற்கிறது. உங்கள் பங்களிப்பைச் செய்யும்போது, விரும்பினால், உங்கள் பங்களிப்பைப் பயன்படுத்த விரும்பும் குறிப்பிட்ட ஆல் பீப்பிள்*

*சர்ச் ஊழியப் பகுதியைக் குறிப்பிடலாம். கூடுதல் விவரங்களுக்கு,* **apcwo.org/give** *என்ற வலைதளத்தைப் பார்வையிடவும்.*

மேலும், உங்களால் முடிந்த போதெல்லாம் எங்களுக்காகவும் எங்கள் ஊழியத்திற்காகவும் ஜெபிக்க மறவாதீர்கள்.

**நன்றி, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!**

## DOWNLOAD THE FREE APP!

*Search for*

"All Peoples Church Bangalore"
in the App or Google play stores.

Available on the App Store

ANDROID APP ON Google play




*A daily 5-minute video devotional.*
*A daily Bible reading and prayer guide.*
*5-minute Sermon summary.*
*Toolkit with Scriptures on various topics to build faith and information to share the Gospel.*
*Resources with sermons, sermon notes, TV programs, books, music and more.*

*IF YOU LOVE IT, TELL OTHERS ABOUT IT!*

# ஆல் பீப்பிள் சர்ச் வேதாகமக் கல்லூரி

apcbiblecollege.org

இந்தியாவின் பெங்களூரில் உள்ள ஆல் பீப்பிள் சர்ச் வேதாகமக் கல்லூரி மற்றும் ஊழியப் பயிற்சி மையமானது, உபதேச ரீதியாக சிறந்த மற்றும் அறிவார்ந்த ஊக்கமளிக்கும் தேவனுடைய வார்த்தையின் படிப்போடு கூட, ஆவியானவரால் நிரப்பப்பட்டு, அபிஷேகம் செய்யப்பட்டு, பரிசுத்த ஆவியானவரின் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையில் ஊழியம் செய்வதற்கு ஆயத்தப்படுத்தவல்ல பயிற்சியை வழங்குகிறது. தேவனுடைய வார்த்தையில் ஆழமாக வேரூன்றியிருக்கும் தேவனுக்கேற்ற குணநலன்களோடு, அடையாளங்கள், அதிசயங்கள் மற்றும் அற்புதங்களால் வல்லமையான செயல்களை ஊழியத்தில் நடத்திக்காட்டும் ஒரு பூரண மனுஷனை எங்களால் உருவாக்க இயலும் என்று நாங்கள் நம்புகிறோம்.

ஆல் பீப்பிள் சர்ச் பைபிள் காலேஜ் (ஏபிசி-பிசி) ஆரோக்கியமான போதனையோடு, தேவனுடைய அன்பை வெளிக்காட்டுவதையும், அபிஷேகம் மற்றும் பரிசுத்த ஆவியானவரின் பிரசன்னத்தையும் மற்றும் தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட கிரியையையும் வலியுறுத்துகிறோம். பல இளைஞர்களும் வாலிப வயதின் பெண்களும் தங்கள் வாழ்க்கையின் மீதான தேவனுடைய அழைப்பை நிறைவேற்றுவதற்காக பயிற்சியளிக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளனர்.

நாங்கள் மூன்று பாட திட்டங்களை வழங்குகிறோம்

- இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியம், ஒரு வருட படிப்பு சான்றிதழ் (C.Th.)
- இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியம், இரண்டு வருட டிப்ளமோ படிப்பு (Dip.Th)
- இறையியல் மற்றும் கிறிஸ்தவ ஊழியம், மூன்று வருட இளங்கலை படிப்பு (B.Th.)

ஒவ்வொரு வார நாட்களிலும், **திங்கள் முதல் வெள்ளி வரை,** இந்திய நேரப்படி **காலை** 9:00 **முதல் நண்பகல்** 12 **மணி வரை** (UTC+5:30) வகுப்புகள் நடைபெறும். நாங்கள் மூன்று வழியில் கற்பதற்கான விருப்பத் தேர்வுகளை வழங்குகிறோம்.

- **வளாகத்தில் கற்றல்:** வளாகத்தில் நேரடியாக வகுப்புகளில் கலந்து கொள்ளுதல்
- **இணைய வழியில் கற்றல்:** ஆன்லைனில் நேரடி விரிவுரைகளில் கலந்து கொள்ளுதல்
- **மின்னஞ்சல் வழியாக கற்றல்: apcbiblecollege.org/elearn** ஆன்லைன் செயலி மூலம் தானாகக் கற்றுக்கொள்ளுதல்

**இணைய வழியில் விண்ணப்பிக்கவும்,** மற்றும் கல்லூரி, பாடத்திட்டம், படிப்புக்கான தகுதி, கல்விச் செலவுகள் பற்றிய கூடுதல் தகவலுக்கும் மற்றும் விண்ணப்பப் படிவத்தைப் பதிவிறக்கம் செய்யவும், தயவுசெய்து **apcbiblecollege.org** என்ற இணையதளத்திற்குச் செல்லவும்.

"பூர்வ எல்லைக்குறிகள்" என்ற இந்தப் புத்தகம், கொஞ்ச நாட்களாகவே என் இருதயத்தில் நான் தியானித்துக்கொண்டிருந்த ஒரு செய்தியாகும், இப்போது இந்தப் புத்தகத்தின் வாயிலாக உங்களுடன் அதைப் பகிர்ந்துகொள்ள விரும்புறேன். நான் ஓட்டத்தை முடிக்கும் அதே இடத்திலிருந்து பந்தயத்தைத் தொடரும் அடுத்த தலைமுறையினருக்கு நான் கையளிக்கும் பந்தயப்பொருளாகவும், நான் பிரசங்கிக்கும் எனது கடைசி செய்திகளில் ஒன்றாகவும்கூட ஒருவேளை இந்தச் செய்தி இருக்கலாம்.

உலகம் மாறிக்கொண்டிருக்கிறது. நேற்று வாய்த்தவை இன்று வாய்க்காமல் போகலாம்! நாம் புதிய உலகத்திற்கு ஏற்ப மாற வேண்டும். புதிய உலகின் கலாச்சாரத்தின் ஒரு பகுதியாக இருக்கும் குறியீடுகள் மற்றும் மொழியைப் பயன்படுத்தி நித்திய சத்தியங்களை நாம் முன்வைக்க வேண்டும். ஆனாலும் கூட, அவ்வாறு செய்வதில் ஆபத்துகள் உள்ளன, அதைப் பற்றி நாம் அறிந்திருக்க வேண்டும். காலத்தால் அழியாத சத்தியங்களை அறிவிப்பதற்கு, நாம் கலாச்சாரத்திலிருந்து விஷயங்களை அப்படியே எடுத்து பயன்படுத்த முடியாது. புதிய உலகின் கலாச்சாரத்தைப் பயன்படுத்தும், ஈடுபடுத்தும் மற்றும் பிரயோஜனப்படுத்திக்கொள்ளும் நமது முயற்சியின் விளைவாக பூர்வ எல்லைக்குறிகளோடு நாம் சமரசம் செய்துகொள்ள முடியாது.

நம் பாய்மரங்களை சரிசெய்து மாற்றியமைத்துக்கொண்டு, சிலவகை காற்று நம்மை அழைத்துச் செல்லும் திசையை நோக்கி நாம் செல்ல வேண்டியிருக்கிறது, இல்லையெனில், நாம் பின்தங்கிப்போய் தற்போதைய புதிய உலகத்திலிருந்து துண்டிக்கப்படுவோம். பின்னர், சில மாற்றங்களின் காற்றுகள் ஒரு குறிப்பிட்ட திசையில் வீசி, நாம் பரிசுத்த எல்லைகளைக் கடந்துபோய்விடும்படியும், தெய்வீக பாரம்பரியங்களை இழந்துபோகும்படியும் செய்கின்றன. புயல்கள் மத்தியில் நம்மை நங்கூரம்போல் நிலையாக நிற்கவைப்பதற்கு நாம் பூர்வ எல்லைக்குறிகளைப் பயன்படுத்தி இந்த மாற்றத்தின் காற்று வழியாக செல்லக் கற்றுக்கொள்ள வேண்டும்.

**வேதாகமத்துடன் இணைந்திருங்கள்.** வேதாகமமே நமது பூர்வ எல்லைக்குறியாகும்!


**All Peoples Church & World Outreach,**
# 319, 2nd Floor, 7th Main, HRBR Layout,
2nd Block, Kalyan Nagar, Bangalore 560 043
Karnataka, INDIA

Phone: +91-80-25452617
Email: contact@apcwo.org
Website: apcwo.org